# மெய்யொளி

# 2012





வெளியீடு:-
யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இளவாலை
2012.11.27

# மெய்யொளி

வெளியீடு:

## யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

## 2012

ilavalaimeihandan@hotmail.com

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர்: | மெய்யொளி |
| இதழாசிரியர்: | திருமதி இந்திராவதி யோகலிங்கம் |
| முகவரி: | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்<br>இளவாலை வடக்கு, இளவாலை. |
| பக்கங்கள்: | 94 |
| தாள் அளவு: | $B_5$ 70g |
| பிரதிகள்: | 200 |
| அட்டைப்பட வடிவமைப்பு: | திரு. ச. கஜந்தன் (ஆசிரியர்) |
| அச்சுப்பதிப்பு: | ஜே. எஸ். பிறிண்டேர்ஸ்<br>பண்டத்தரிப்பு. 021 225 0665 |

# சமர்ப்பணம்



மெய்கண்டானை வாழ்வித்துக்கொண்டிருக்கும்

## வள்ளல் ஏழூர் இராசரத்தினம்

அவர்களது

பாதக் கமலங்களுக்கு

இந்நூல்

## சமர்ப்பணம்

-மலர்க்குழு-

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!


சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

# உள்ளே...




| | |
|---|---|
| 01 நூல் விபரம் | 02 |
| 02 சமர்ப்பணம் | 03 |
| 03 தமிழ்மொழி வாழ்த்து | 04 |
| 04 உள்ளடக்கம் | 05 |
| 05 மகுட வாசகம் | 07 |
| 06 வித்தியாலயகீதம் | 08 |
| 07 பாடசாலை தொடர்பான அடிப்படைத்தகவல்கள் | 09 |
| 08 மாணவர் உறுதியுரை | 11 |
| 09 மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டுக் கீதம் | 12 |
| 10 மலராசிரியரின் உள்ளத்திலிருந்து... | 12 |
| 11 மலர்க்குழு விபரம் | 13 |
| 12 சிவஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி | 14 |
| 13 அருட்தந்தை அவர்களின் அருளாசிச் செய்தி | 15 |
| 14 வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | 16 |
| 15 நிறுவுநரின் செல்வமகள் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 17 |
| 16 மெய்கண்ட அன்னையின் மெய்யொளி வாழ்க | 18 |
| 17 திரு.செ.உ.சந்திரகுமாரன் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 19 |
| 18 பிரதிக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 20 |
| 19 சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வாழ்த்துச்செய்தி | 21 |
| 20 தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வாழ்த்துச்செய்தி | 22 |
| 21 திரு.சிவ.கௌரிபாலன் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 23 |
| 22 அதிபர் அறிக்கை | 24 |
| 23 அம்மா | 38 |
| 24 மரம் வளர்ப்போம் | 38 |
| 25 அப்பா | 38 |
| 26 பூக்கள் | 39 |
| 27 நான் விரும்பும் பாடசாலை | 39 |
| 28 சிறு துளி பெரு வெள்ளம் | 40 |
| 29 தொலைத்தொடர்பு சாதனங்களின் நன்மை தீமை | 41 |
| 30 எமது கடமைகள் | 42 |
| 31 பொது அறிவு | 43 |
| 32 புதியதோர் உலகம் செய்வோம் | 44 |
| 33 கைம்மாறு | 44 |

| | |
|---|---|
| 34 மூன்றின் பெருமை | 45 |
| 35 வியத்தகு நீர் | 45 |
| 36 நூலகம் | 46 |
| 37 வாழ்க எம் மெய்கணடான் அன்னையே | 47 |
| 38 பொதுஅறிவு | 48 |
| 39 புகழ் பெற்ற நாடுகள் | 48 |
| 40 வருடங்களின் நிறைவு விழாக்கள் | 49 |
| 41 சிறுவர் உரிமை மீறல்கள் | 50 |
| 42 நீளப்பெருவாயின் அறிவுப்பொக்கிசம் | 52 |
| 43 என் ஊரின் சில ஞாபகங்கள் | 53 |
| 44 கண்டிப்பு | 54 |
| 45 பிரியாத நட்பு | 57 |
| 46 இலட்சியம் | 59 |
| 47 மனையும் மனை அலங்காரமும் | 62 |
| 48 MY BEST FRIEND | 64 |
| 49 MY FAVOURITE GAME | 64 |
| 50 TREES | 65 |
| 51 THE REAL MEANING OF HOMEWORK | 66 |
| 52 OUR TEACHERS | 67 |
| 53 LETS PRESERVE THE AIR AROUND US | 68 |
| 54 ஊடகங்களும் உலக நடப்புக்களும் | 69 |
| 55 உங்களுக்குத் தெரியுமா? | 72 |
| 56 மெய்கண்ட நங்கையே! | 74 |
| 57 எமது பாடசாலையில் பேணப்பட்டு வருகின்ற சைவப்பாரம்பரியங்கள் | 75 |
| 58 மூன்று தசாப்தங்கள் மெய்கண்டான் அன்னையுடன்... | 78 |
| 59 கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது ...... | 80 |
| 60 தீபத்திருநாளாம் கார்த்திகைத்திருநாள் | 84 |
| 61 பரிசுப்பட்டியல் | 86 |
| 62 ஞாபகார்த்தப்பரிசில்கள் | 90 |
| 63 பாடசாலைக்கிடைப்படம் | 91 |
| 64 ஆசிரியர் விபரம் | 92 |
| 65 நிதி அன்பளிப்புச் செய்தோர் | 93 |
| 66 நன்றிகள் | 94 |

## மகுட வாக்கியம்

வாழக்கல்மின்

(Learn to Live)

## தூர நோக்கு

(Vision)

சமநிலை ஆளுமையுள்ள நிறைவான பிரஜைகளை உருவாக்கல்.

## பணிக்கூற்று

(Mission Statement)

வளரும் உலகின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சமநிலை ஆளுமையுள்ள கல்வி, கலை, பண்பாடு, ஒழுக்கம், நிறைந்த நற்பிரஜைகளை உருவாக்கல்.

-2012-

# வித்தியாலய கீதம்

**இராகம்: கல்யாணி** **தாளம்: ஆதி**

வாழிய மெய்கண்டான் மகா வித்தியாலயம்
நீடிசை யோடு பல்லூழி


ஏழூர் இராசரத்தினமா மகிபன்
இளவா லைக்கருள் நிதியம்
வாழக் கல்மின் எனும்பேர் இலட்சிய
வாசக மாண்பொருள் தந்தே

தாமரை ஏடு தீபம் நல் இடபம்
தாங்கிய இலச்சினை யாலே
தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்
தரணியில் நாம் பெற நின்றே

கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக
காண்பெரும் புகழெமக் காக்கி
வாழ்க... வாழ்க... வாழ்க...
மாநிலம் போற்றிட வாழ்க

பாடல் ஆக்கம்:
**கலாபூசணம் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை**


PRINCIPAL
MR.A.RANGANATHAN
SLPS – 2 : II
எங்கள் அதிபர்
திரு. அ. இரங்கநாதன் (S. L. P. S. 2-II)


எங்கள் உப அதிபர்
Vice Principal
Mr. C. ANANTHEASWARAN
SLTS-I
திரு. செ. ஆனந்தீஸ்வரன் S.L.T.S. I

# பாடசாலை தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| 01. | பாடசாலையின் பெயர்: | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் |
| 02. | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு: | 1922 |
| 03. | பாடசாலை நிறுவியவர் : | வள்ளல் ஏழூர் இராசரத்தினம் |
| 04 | பாடசாலைத் தரம்: | 1C |
| 05. | கல்வி மாவட்டம்: | யாழ்ப்பாணம் |
| 06. | கல்வி வலயம்: | வலிகாமம் |
| 07. | கோட்டம்: | தெல்லிப்பழை |
| 08. | பாடசாலையின் நிறம்: | கருஞ்சிவப்பு |
| 09 | மகுட வாசகம்: | வாழக்கல்மின் |
| 10. | இல்லங்கள்: | கலைமகள் (பச்சை)<br>மலைமகள் (றோஸ்)<br>அலைமகள் (நீலம்) |
| 11. | உயர்தர வகுப்பு ஆரம்பம்: | 1980 |
| 12. | மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது: | 1980/02/01 |
| 13. | இடப்பெயர்வின் பின் புனரமைப்பு தொடங்கிய ஆண்டு: | 1997 |
| 14 | தொகை மதிப்பு இலக்கம்: | 09123 |
| 15 | பாடசாலை இலக்கம்: | 1013006 |
| 16 | பரீட்சை இலக்கம்: | 11096 |

## மாணவர் உறுதியுரை

மெய்கண்டானின் மாணவர் நாங்கள்
மேன்மை பெறவே கற்றிடுவோம்
கல்வியில் உயர்வோம் மெய்நெறி காப்போம்
கலைபல பயில்வோம் கவின்பெறுவோம்
வள்ளல் ஏழூர் காட்டிய வழியில்
வாழக்கற்போம் வளம் பெறுவோம்
வாழக்கல்மின்! வாழக்கல்மின்! வாழக்கல்மின்!!!

# கொடிக்கீதம்

பல்லவி

மெய்கண்டான் அன்னைக் கொடி ஏற்றிடுவோம் - கல்வி
மேன்மை எல்லாம் பெருகப் போற்றிடுவோம்
(மெய்கண்டான்)

அனுபல்லவி

பொய்மை அறியாமை இருள் அகன்றே - உலகில்
மெய்மை அறியும் கல்வி ஒளி பெருக
(மெய்கண்டான்)

சரணம்

வள்ளல் ஏழூர் புகழ் பேசும் கொடி - இது
வாழக் கற்போரை வரவழைக்கும் கொடி
உள்ளத்தில் உண்மை ஒளி ஏற்றும் கொடி - இது
உத்தமராக்கி எமை உயர்த்தும் கொடி
(மெய்கண்டான்)

பாடல் ஆக்கம்:
கலாபூசணம் சைவப் புலவர் சு. செல்லத்துரை

# மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டுக் கீதம்

மாதா பிதா குரு தெய்வம் - அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்
ஆதாரமான தெய்வம் அன்னை தந்தை ஆசிரியர்
பாதாரவிந்தங்களை பணிந்து வணங்கிடுவோம். (மாதா)

என்னைச் சுமந்து பெற்று
இதமாய் அரவணைத்துத்
தன்னை உருக்கிப் பாலாய்
தன் வலுவையூட்டி
பொன் எனவே போற்றி புகழுக்கு ஆளாக்கும்
அன்னை பதமலரை அனுதினமும் தொழுதிடுவோம்.

சிந்தை செயல்கள் எல்லாம் எந்தன் உயர்வுக்காக்கி
சந்ததமும் முயன்று தன்னுயிர் போலக் காத்து
முந்தி இருக்க வைத்த முன்னறியும் தெய்வம்
தந்தை திருவடியை சந்ததமும் தொழுதிடுவோம் (மாதா)

கல்வி அறிவு ஒழுக்கம் கடமை உணர்வை ஊட்டி
எல்லை இல்லா அன்பால் எம்மை வழிநடத்தி
செல்லும் இடங்கள் எல்லாம் சிறப்பாய் இருக்க வைத்த
நல்லாசிரியர்களை நாளும் தொழுதிடுவோம். (மாதா)

உள்ளம் உருகித்தொழ அள்ளி அருள் பொழிந்து
தெள்ளத் தெளிந்த மனத்திண்ணம் எமக்களித்து
வெள்ளைமனதில் கல்வி வெள்ளம் எனப்பெருக்கும்
வள்ளல் இறைவன் பாதம் வணங்கித் தொழுதிடுவோம் (மாதா)

பாடல் ஆக்கம்:
கலாபூசணம் சைவப்புலவர் திரு சு. செல்லத்துரை

## மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

மெய்கண்டானின் சேவையைப் போற்றிக் கௌரவிக்கும் அதேவேளை நிறுவுநரின் சேவையைப் பாராட்டும் வகையிலும் இம்மெய்யொளி மலரானது வெளிவருகின்றது. இம்மலரானது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் பாடசாலை தொடர்பான தகவல்களையும் சாதனைகளையும் கொண்டு உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

மெய்யொளி மலர் மலர்வதற்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டாலும் மெய்கண்டானை வாழ்வித்துக் கொண்டிருக்கும் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் ஆத்மபலத்தினால் இம்மலர் மலராக வெளிவந்துள்ளதையிட்டு மலராசிரியர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

பொன் விழா மலர்(1978), பவள மலர்(1998), திரு.அ.பேரம்பலம் அதிபர் அவர்களின் பணி நயப்பு மலர்(2005), நடுவூர்ப்பழுத்த நன்மரம் (2009), மெய்யொளி (2011), சிவானந்தமலர் (2012) எனப்பல மலர்கள் மலர்ந்து மெய்கண்டான் மணங்கமழ்ந்து கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் இவ்வாண்டு மெய்யொளி மலர் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர்களுக்கு முதற்கண் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் மெய்யொளி மலர் வருடந்தோறும் மலர்ந்து மணங்கமழ தம்மால் இயன்ற நிதிப்பங்களிப்பை நல்கி மாணவர்களது ஆக்கங்களுக்கு வலுச் சேர்த்துக் கொண்டிருக்கும் திரு.சி.கௌரிபாலன் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இம்மலருக்கு ஆசிச்செய்திகளைத் தந்துதவிய அருளாளர்களுக்கும் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய கல்வியியலாளர்களுக்கும் மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.மெய்யொளி மலர் மலர ஆக்கங்களைத் தந்துதவியதோடு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இம்மலரின் ஆக்கங்களை சரிபார்ப்பதற்காக அல்லும் பகலும் தன்னலம் பாராது அயராது பாடுபட்ட ஒவ்வொருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த அழகிய அட்டைப்படத்தை வடிவமைத்துத்தந்த ஆசிரியர் திரு.ச.கஜந்தன் அவர்களுக்கும் சிறந்த முறையில் அச்சுப்பதிப்புச் செய்து தந்த JS அச்சகத்தாருக்கும் மலருக்கான புகைப்படங்களை எடுத்து உதவிய திரு.வீ.விஜயகாந்தன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மெய்யொளி மலரானது ஆண்டுதோறும் மலர்ந்து மெய்கண்டானை மணங்கமழச் செய்ய எல்லாம் வல்ல நடராஜப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

**திருமதி இ. யோகலிங்கம்**
ஆசிரியை



மலர்க்குழு

# மலர்க்குழு

தலைவர்: **திரு. அ. இரங்கநாதன் (அதிபர்)**

இதழாசிரியர்: **திருமதி. இ. யோகலிங்கம்**

செயற்குழு உறுப்பினர்கள்:

**திரு. செ. ஆனந்தீஸ்வரன்**

**திரு. ச. கஜந்தன்**

**திரு. வி. நற்குணசிங்கம்**

**திருமதி மா. உதயகுமார்**

**செல்வி செ. சுகிர்தா**

**திருமதி க. பத்மராஜா**

**திருமதி. யோ. ஸ்ராலின்**

# இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலய ஆதீன குருவின்

# அருளாசிச் செய்தி

சைவப் பண்பாட்டின் நிலைக்களனாக திகழும் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர்வரும் 27-11-2012 கார்த்திகைத் தீப நன்னாளில் ஸ்தாபகரான வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களை நினைவுகூர்ந்து "மெய்யொளி" எனும் நூலினை வெளியிடுவதை இட்டு பெருமகிழ்வடைகிறேன். இந்நூலானது வருடந்தோறும் வெளியிடப்படுவது சிறப்பம்சமாகும்.

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் தியாகத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட பாடசாலையானது இன்று அவரது கனவினை நனவாக்கும் வகையில் கல்வி, கலை, சமயம், ஒழுக்கம், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இப்பாடசாலையானது மென்மேலும் பல வளர்ச்சிகளைக் காணவும் இந்நூல் வெளியீடு சிறப்புற அமையவும் எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விநாயகப்பெருமான் ஆசீர்வதிப்பாராக.

**சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக்குருக்கள்**
இளவாலை ஆனைவிழுந்தான்
ஆலய ஆதீன குரு

## அருட்தந்தை அவர்களின்

# அருளாசிச் செய்தி

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அங்கு வசிக்கின்ற மக்களின் கல்வி வளர்ச்சியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அந்த வகையில் ஒழுக்க விழுமியங்களைக் கட்டிக்காப்பதற்கும், பொருளாதார நெருக்கீடுகளுக்கு முகங்கொடுப்பதற்கும், வாழ்வியல் சவால்களை எதிர்கொள்ளவும் கல்வியே வழியமைத்துக் கொடுக்கின்றது. இத்தகைய கல்விப்பணியை இளவாலைப்பகுதியில் புரிந்துவரும் பாடசாலைகளில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் சிறப்பான இடத்தை வகிக்கின்றது.

கிராம மக்களுக்குக் கல்வி அறிவை ஊட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்றும் அதே பணியை நிறைவேற்றிப் பல சாதனைகளை நிலைநாட்டி நிற்பது கண்கூடு. இப்பாடசாலைச் சமூகமானது பாடசாலையின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு வெளியிடும் மெய்யொளி மலருக்கு பழைய மாணவன் என்ற வகையில் ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இம் மலரானது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. உள்ளக வளங்களைப் பயன்படுத்தி பலசாதனைகளை நிலைநாட்டி சிறந்த பாடசாலையாக இப்பாடசாலையை மென்மேலும் வளர்க்க வேண்டுமென ஆசிக்கின்றேன். பாடசாலைக் கொடி வானுயர பட்டொளி வீசிப் பிரகாசிக்க இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**"உள்ளுவதெல்லாம் உயர்வு"**

**அருட்தந்தை எ. எட்வினாதன்**
பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## மெய்யொளியை நோக்கி...

எமது கல்விக் கட்டமைப்பில் பல பாடசாலைகள் கல்வித் தேவையுள்ள இடத்தில் நிறுவப்பட்டுள்ளன. குறிப்பாகப் பிள்ளைகள் தாம் வாழும் சூழல் மற்றும் தாம் சார்ந்த சமய விழுமியங்கள் வாயிலாகக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறான சில பாடசாலைகள் இளவாலைப்பகுதியில் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று தான் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகும்.

இப்பாடசாலையின் அமைவிடம், அதன் சூழல், நுழைவாயில், கட்டட அமைவுகள், பிரதான மண்டபம், வழிபாட்டிடம் எல்லாமே மனங்கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன. இப்பாடசாலையில் அமைந்துள்ள திருக்கோயிலில் உறைந்திருக்கும் நடராஜர் திருவுருவம் மிகப் பழைமையானது என்பதுடன் மனதை ஈர்க்கவல்லது. இம்மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் இறையுணர்வு பிரவாகிப்பதை உணரலாம்.

இப்பாடசாலையின் நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் உன்னத குறிக்கோளின் குறியீடாக இப்பாடசாலை மிளிர்கிறது. இச்சுற்றாடலில் உள்ள ஏழைச்சிறார்கள் தாம் வாழும் சூழலில் ஆன்மீக நெறி நின்று கல்வியைப் பெற வேண்டும் என விரும்பினார். அவரின் எண்ணம் போல் இப்பாடசாலை வளர்ச்சிப் பாதையில் செல்கிறது.

இவ்வித்தியாலயத்திற்குப் பக்க பலமாக நிறுவுநரின் வழித்தோன்றல்கள் என்றும் துணைநிற்கின்றனர். ஊர்ப்பெரியவர்களின் அபரிமிதமான அக்கறை, பாடசாலை ஆசிரியர்களின் உன்னதமான சேவை, அதிபர் அவர்களின் அயராத உழைப்பு இவையெல்லாம் இவ்வித்தியாலயத்திற்கு என்றும் வளம் சேர்க்கவல்லன.

எமது கல்விச் சூழலில் எத்தனையோ பிரபலமான பாடசாலைகள் உள்ளன. இவை மாணவர்களைக் கவர்ந்திழுக்கின்றன. இந்நிலையில் இவ்வித்தியாலயமே எமக்கு வாழ்வளிக்கவல்லது என்ற அசையாத நம்பிக்கையுடன் நாடி வரும் ஏழைச்சிறார்களை மெய்யொளியை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். இம் மாணவர் வாழ்வில் ஒளி பிறக்க வழி காண்போம்.

அன்புடன்

**ஆ. இராஜேந்திரன்**

வலயக்கல்விப்பணிப்பாளர்.

# நிறுவுநரின் செல்வ மகள்
## அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் "மெய்யொளி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துவரும் இக்கால கட்டத்தில் மாணவர்களின் வாசிக்கும் திறனும் எழுத்தாற்றலும் குன்றி வரும் நிலையில் பாடசாலைச் சஞ்சிகைகள் மூலம் எழுத்தாற்றலையும் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டுவதற்கு "மெய்யொளி" உதவும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி இதன் மூலம் இளம் எழுத்தாளர்கள் உருவாகுவதோடு எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக வளர்ச்சிய டைவார்கள் என்பது திண்ணம்.

பெறுதற்கரிய மானிடப்பிறவியை எடுத்த நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் அமைதியுடனும் சாந்தி சமாதானத்துடனும் ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு அத்தியாவசியமான பண்புகளான அன்பு, உண்மை, பொறுமை, பிறரை மதித்தல், நடுநிலைமை, நீதி, சுயநலமின்மை, கருணை, அகிம்சை போன்ற பண்பாட்டு விழுமியங்களைப் பேணி அதிபர், ஆசிரியர்கள் முன் மாதிரியாக இருந்து வழிகாட்டுவதுடன், மாணவர்கள் பின்பற்றி ஒழுகச்செய்து, எதிர்காலச் சமுதாயத்தை வளப்படுத்த உறுதுணையாக இருக்க வேண்டும். சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பெருமையைப் பாடசாலை அடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விநாயகரைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

**கிருபாசக்தி தர்மதாசன்**
நிறுவுநரின் செல்வ மகள்

# மெய்கண்ட அன்னையின்
# மெய்யொளி வாழ்க

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

என்னும் மகாகவி பாரதியின் வாக்கினை இலட்சியமாகக் கொண்டு வள்ளல் ஏழூர் இரசரத்தினம் அவர்கள் ஏழைகளுக்கு எழுத்தறிவிப்பதற்காக மெய்கண்டானை நிறுவினார்.

நிறுவிய (1922) அன்று முதல் இன்று வரை அப்பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவருடைய ஆத்மபலம் அவர் மறைந்த பின்னும் மெய்கண்டானை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது.

மெய்கண்ட அன்னை தந்த கல்வியால் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் என்றும் மெய்கண்டான் அன்னையையும், வள்ளல் ஏழூரையும் நினைத்து வணங்கி வாழ்த்திக் கொண்டே இருப்போம்.

ஆண்டுதோறும் மலரும் மெய்யொளி மூலம் மெய்கண்டானின் வளர்ச்சிப் பணிகளை எல்லோரும் அறிந்து மகிழும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மெய்யொளியை வாழ்த்துவதுடன், மெய்யொளி மலர உழைக்கின்ற அதிபர், மலராசிரியர், மலர்க்குழு முதலான அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம் சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**
(ஓய்வுநிலை அதிபர்)

# சிரேஸ்ட கணக்காளர் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

கிராமத்துச் சைவச் சிறார்களுக்குக் கல்வி வழங்க 1922இல் எமது பாடசாலையை நிறுவிய வள்ளல் ஏழுர் இராசரத்தினம் அவர்களது நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நிகழ்வதை ஆவணமாக்கி வெளிவரும் பயனுள்ள மலருக்கு இப்பாடசாலை மூலமாக பெரும் பயன்பெற்ற என்போன்ற பழைய மாணவர்கள் சார்பாக பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய முன்னாள் மற்றும் இன்றைய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் இம்மெய்யொளி ஊடாக வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன்.

யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் அன்று முதல் இன்று வரை ஒரு கிராமத்துப் பல்கலைக்கழகமாக திகழ்வது யாவரும் அறிந்த விடயம். எமது பாடசாலையானது ஆளுமையுடைய, பல்திறனுள்ள சமூகத்துக்குப் பயன்தரக் கூடிய நற்பிரஜைகளை கலை, கலாசாரம், பண்பாடு பிறழாது உருவாக்கி வந்துள்ளதை இம்மலரின் மூலம் சான்றோருக்குச் சான்றுபடுத்துவதில் மகிழ்வடைகின்றேன்.

நிறுவுநர் வள்ளல் ஏழுர் இராசரத்தினம் அவர்களது எண்ணத்தை செயற்படுத்திவரும் அனைவரும் தொடர்ந்தும் பாடசாலை வளர்ச்சிக்கு உழைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. செ. உ. சந்திரகுமாரன்**
சிரேஷ்ட கணக்காளர்,
பொது நிதிமுகாமைத்துவ நிபுணர்
(புறநெகும திட்டம்),
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யா/.இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பாடசாலை நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறும் மகிழ்ச்சிகரமான இவ்வேளையில் மெய்யொளி மலர் வெளியிடப்படுவதானது, இப்பாடசாலைச் சமூகத்திற்கும் எம் அனைவருக்கும் பெரும் பேறாக அமைகிறது.

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் பாடசாலை தொடர்பான பல்வேறு விபரங்களையும் உள்ளடக்கியுள்ள மெய்யொளி மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகையும் பெருமையும் அடைகின்றேன்.

இப்பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கூட்டிணைந்த முயற்சியாக மெய்யொளி வெளியிடப்படுவது வாழ்த்தி வரவேற்கப்பட வேண்டியதாகும். பாடசாலைச் சமூகத்தின் சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றினதும் ஒருமித்த வெளிப்பாடாக மெய்யொளி பரவுகிறது. முயற்சியினாலும் கடின உழைப்பினாலும் சிந்தனை சொல்லுருப் பெற்று செயல் வடிவமெடுத்து மெய்யொளியாக அச்சேறியிருக்கிறது. மெய்யொளி மலராக மலர்ந்து நறுமணம் வீசுகிறது. உயிர்த்துடிப்பும் ஊக்கமும் மிக்க இந்த வெளியீட்டுப்பணி உன்னதம் கொண்டது.

மாணவப்பருவத்தில் இருக்கும் காலத்தில் தமது ஆக்கங்கள் அச்சேறி ஒரு மலரில் வெளிவருகின்றபோது இத்தகைய பூரிப்பும் உற்சாகமும் அளவிட முடியாதது. இத்தகைய பூரிப்பும் உற்சாகமும் மாணவர்கள் மத்தியிலிருந்து சிந்தனைச் சிற்பிகளையும் படைப்பாளிகளையும் உருவாக்க உதவுபவை. மேலும் தேடித் தேடி வாசிக்கவும் படிக்கவும் ஆராயும் திறனை வளர்க்கவும், விஞ்ஞான பூர்வமாக அறிவுத்தேடலை தொடரவும் ஆக்க பூர்வமான கற்பனை வளத்தை பெருக்கிக் கொள்ளவும் மெய்யொளி போன்ற மலர் வெளியீடுகள் மாணவர்களுக்கு உதவுகின்றன. அத்துடன் அவர்களுக்கு கூட்டுறவு, நல்லிணக்கம், ஒருங்கிணைந்து பணியாற்றல், சரி பிழைகளை ஆராய்ந்து சமநிலை காணுதல், ஆக்க பூர்வமாக திறனாய்வு செய்யப்பழகுதல், விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளல் முதலிய சமூகப் பண்புகளையும் வளர்த்து விடுகின்ற நல்வாய்ப்புக்கள் இத்தகைய மலர் வெளியீடுகளால் ஏற்படுகின்றன.

ஆகவே மெய்யொளி மலர் வெளியிடும் இந்த அரும்பணி, பாடசாலை நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் ஒன்று சேரும் இந்நாளில் இடம்பெறுவது சாலப் பொருத்தமாகும். பாடசாலை நிறுவுநரின் கனவும் பரிசளிப்பு விழாக்காணும் மாணவர் மகிழ்ச்சியும் பெற்றோர் ஆசிரியர்கள் பெருமையும் குதூகலமும் ஒன்று கலக்கும் இத்தருணத்தில், எல்லாவற்றுக்கும் மேலான இறையருளை வேண்டி மெய்யொளி மலர் பூரணத்துவமும் சிறப்புகளும் மிக்கதாக அமையவும் குறிப்பாக மாணவர்களுக்கும் பொதுவாக பாடசாலைச் சமூகத்திற்கும் மெய்யொளி பயனுறுதி மிகுந்த அனுபவங்களை வழங்கவும் வாழ்த்துரைத்து விடைபெறுகிறேன்.

**திரு. ச. கைலாசநாதன்**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்

### சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர்

### அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கார்த்திகைத் தீப நன்நாளில் நிறுவுநர் நினைவு தினத்தையும் பரிசளிப்பு விழாவினையும் மெய்யொளி மலர் வெளியீட்டினையும் யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் நடாத்துவதையிட்டும், அம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டும் முன்னாள் அதிபர் என்ற வகையில் உளம் மகிழ்வடைகின்றேன்.

காலங்காலமாக கல்வியுடன் கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள், ஒழுக்கம் என வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் ஒன்றுசேர மாணவருக்கு வழங்கித் தனக்கென ஓர் இடத்தைப் பொறித்து நிற்கிறது இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

இப்பாடசாலை மரங்கள் சூழ இயற்கையழகுடன் மிடுக்காக நிமிர்ந்து நிற்கும் இப்பாடசாலையின் அழகு போலவே "சமநிலை ஆளுமையுள்ள பிரஜைகளை உருவாக்கல்" என்ற தூர நோக்குடனும் "வாழக்கல்மின்" என்ற மகுட வாசகத்துடனும் தன் செயற்பாட்டினையாற்றி வறிய பிள்ளைகளுக்கும் உயரிய தொண்டாற்றி வருகின்றமை வெள்ளிடைமலை.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக்கொண்டிருப்பதோடு இணைபாட விதானச் செயற்பாடுகளில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டம் வரை சென்று சாதனைபடைத்து வருகின்றது.

இவ்வாறு பாடவிதான, இணைபாடவிதானச் செயற்பாடுகளுடன் மன்றங்கள் பலவற்றையும் நடாத்தி மாணவரின் ஆளுமை விருத்தியை வளர்த்து வரும் இப்பாடசாலை மாணவர், ஆசிரியர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தவும், பாடசாலைச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும் மெய்யொளி மலரினை ஆண்டுதோறும் வெளியிட அனுசரணை வழங்கும் பழையமாணவன் திரு. சி. கௌரிபாலன் அவர்களுக்கும் இம்மலர் வெளியிட உழைத்த மலர்க்குழுவினருக்கும் மலராசிரியர் திருமதி. இந்திராவதி யோகலிங்கம் அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் இனிவருங்காலங்களிலும் இம்மலர் வெளிவரவும், பாடசாலையின் சகல செயற்பாடுகளும் உயர்வான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவும் ஆனைவிழுந்தான் விநாயகரினதும் மெய்கண்டான் வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானினதும் அருளை வேண்டி இம்மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வாழ்க! உயர் புகழ் ஓங்குக!*

**திரு. ச. சிவானந்தராசா**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்க் கோட்டம்.

**கோட்டக் கல்விப்பணிப்பாளர்**

**அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் உருவாக்கப்பட்டு சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பாடசாலையாகத் திகழ்வது யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையில் நிறுவுநர் நினைவு தினத்தையும் பரிசளிப்பு விழாவையும் முன்னிட்டு ஆண்டு தோறும் மெய்யொளி மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். ஆசிரியர்கள் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் மெய்யொளி மலர் சிறப்பாக அமையவும் எந்தவித தடையுமின்றி ஆண்டுதோறும் வெளிவரவும் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. சு. சண்முககுலகுமாரன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழை,

## பழைய மாணவன் திரு. சிவ. கௌரிபாலன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் நினைவு தினத்தில் அவரது நினைவாக இந்நூல் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மெய்கண்டான் அன்னையின் விருட்சத்தின் நிழலில் எனது தந்தையார் திரு.வி.சிவகுருநாதன் அவர்கள் 1933ம் ஆண்டு முதல் 1942 ம் ஆண்டு வரை கல்வி கற்றார். பின்னர் இப்பாடசாலையிலேயே கல்வி கற்பித்தார். தொடர்ந்து அவரது பிள்ளைகளாகிய நாமும் இவ்விருட்சத்தின் நிழலிலேயே கல்வி கற்கின்ற வாய்ப்பும் கிடைத்தது. உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்காக வேறு பாடசாலைகளுக்குச் சென்றோம். ஆனால் மெய்கண்டானில் எங்களுக்குக் கிடைத்த பாடங்கள், அனுபவங்கள் இன்றும் நினைத்தால் மெய்சிலிர்க்கும்.

இப்படியான ஒரு கல்விக்கூடத்தை எமக்களித்த வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் நினைவாக ஆண்டு தோறும் வெளிவரும் இம்மெய்யொளி மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விநாயகர் துணை நிற்பாராக. நினைவு நாளை முன்னிட்டு வெளிவரும் மெய்யொளி மலர் சிறப்புற வாழ்த்தி வணங்குகின்றேன்.

நன்றி

**திரு. சிவ. கௌரிபாலன்,**
பழைய மாணவன்,
கனடா.

# அதிபர் அறிக்கை

மெய்கண்டானை வாழ்வித்துக் கொண்டிருக்கும் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அனுக்கிரகத்தோடு ஆடவல்லான் நடராஜப்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கிக் கொண்டு நிறுவுநர் நினைவு நாளை முன்னிட்டு வருடாந்த மலரான மெய்யொளி மலர் வெளியீட்டையும் பரிசுத்தினத்தையும் ஒருங்கே நடாத்துவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவனும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிரேஸ்ட கணக்காளராகக் கடமையாற்றும் திரு செ. உ. சந்திரகுமாரன் அவர்களே! எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. சிவானந்தராசா அவர்களே!

ஆசியுரை வழங்க வந்திருக்கும் சிவஸ்ரீ இராம பாலச் சந்திரக்குருக்கள் ஐயா அவர்களே! நிறுவுநர் நினைவுப் பேருரை நிகழ்த்த வந்திருக்கும் பழைய மாணவன் திரு.த.தயானந்தன் அவர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! எமது பாடசாலை ஆசிரியர்களே! மாணவர்களே! அனைவருக்கும் காலை வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நாளில் இவ்வாண்டிற்கான அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## காலை ஆராதனை

தினமும் காலையில் அனைத்து மாணவர்களும் காலை ஆராதனைக்காக மைதானத்தில் ஒன்று கூடுவர். முதலில் இந்து சமய ஆராதனை இடம்பெறும் அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ கீதம் இசைக்கப்படும். அதிபர் அவர்களினால் இன்றைய நாள் நல்லபொழுதாக அமைய வாழ்த்துக்கள் கூறி நற்சிந்தனை வழங்குவது வழமையாகும். அதனைத் தொடர்ந்து ஆசிரியர் மாணவர் நற்சிந்தனையும் இடம்பெறும். அடுத்து மாணவர் ஒருவரால் அன்றைய தினப் பத்திரிகையின் தலைப்புச் செய்திகள் வாசிக்கப்படும். பின்னர் மாணவர்கள் காலை உடற்பயிற்சியில் ஈடுபடுவர். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமான் ஆலயத்தில் பூசை வழிபாடுகளும் பஜனையும் இடம்பெறும்.

## ஆசிரியர் குழாம்



**இடமிருந்து வலம் (இருப்போர்):**

திரு. பா. செந்தூரன், திரு. து. இந்திரஜித், திரு. ச. கஜந்தன், திரு. செ. ஆனந்தீஸ்வரன் (உ.ப.அதிபர்)

திரு. அ. இரங்கநாதன் (அதிபர்), திரு. வி. நற்குணசிங்கம், திரு. ம. சிவமோகன், திரு. வி. விஸ்ணுகரன்,

திரு. சு. சுரேஸ்குமார் (O.E.S.)

**இடமிருந்து வலம் (நிற்போர்):**

திருமதி க. பத்மராஜா, திருமதி. யோ. ஸ்ராலின், செல்வி செ. சுகிர்தா, திருமதி ஜி. விக்னேஸ்வரன், திருமதி ச. இலட்சியன்

திருமதி அ. தம்பிராசா, திருமதி வ. குமாரலிங்கம், திருமதி ம. கி. சற்குணராஜா, திருமதி யூ. அன்ரனிராஜா,

திருமதி மா. உதயகுமார், திருமதி இ. யோகலிங்கம், திருமதி பு. திருநாவுக்கரசு, திருமதி வ. இராமச்சந்திரன்.

# முகாமைத்துவக்குழு



திரு. வி. விஸ்ணுகரன், திரு. பா. செந்தூரன், திரு. செ. ஆனந்தீஸ்வரன் (உபஅதிபர்), திரு. அ. இரங்கநாதன் (அதிபர்)

திரு. வி. நற்குணசிங்கம், திருமதி வ. இராமச்சந்திரன், திருமதி. பு. திருநாவுக்கரசு, திருமதி. இ. யோகலிங்கம். திருமதி யூ. அன்ரனிராஜா

## ஆசிரிய ஆளணி

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு எமது பாடசாலையின் ஒவ்வொரு ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர். இவர்கள் உபஅதிபர், பகுதித்தலைவர்கள் எனத்தத்தம் பணியை செவ்வனே நிறைவேற்றுகின்றனர்.

| | |
|---|---|
| இலங்கை அதிபர் சேவை 2-II | - 01 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | - 05 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | - 16 |

எமது பாடசாலையில் திரு. சு. சுரேஸ்குமார் (O.E.S) அவர்கள் அலுவலகச் செயற்பாடுகளைத் திறம்பட ஆற்றி வருகின்றார்.

## தொண்டர் ஆசிரியர் விபரம்

எமது பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவிய வேளையில் மாணவர்களின் அறிவுப்பசியைப் போக்க வந்த தொண்டர் ஆசிரியர்களின் சேவை போற்றுதற்குரியதாகும். அந்தவகையில் இவ்வருடம் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் விபரம்.

1. செல்வி. தி. பகீரதி
2. செல்வி. சி. ஆன்சோபியா
3. செல்வி. செ. கஜேந்தினி
4. செல்வி. ச. லக்சியா
5. திரு. S. மஜீபன்
6. செல்வி. சி. சிந்துஜா

## மாணவர் எண்ணிக்கை

வள்ளல் ஏழூரரின் சிந்தனை உருப்பெற வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டு எமது பாடசாலையில் இணைந்து பல மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள். அந்தவகையில் மாணவர் தொகை வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆரம்பப்பிரிவு | 1 - 5 | 97 |
| கனிஸ்ட பிரிவு | 6 - 11 | 240 |
| சிரேஸ்ட பிரிவு | 12 - 13 | 20 |
| | | 357 |

## ஆசிரியர் இடமாற்றம்

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. ச. சிவானந்தராசா அவர்கள் பதவி உயர்வு பெற்று சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சென்றுள்ளார். 02.04.2012 முதல் திரு.அ.இரங்கநாதன் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றுள்ளார். ஆசிரியர்களான திரு. சி. பாலகிருஸ்ணன், திருமதி. த. ஞானச்சந்திரன், செல்வி. ச. சின்னத்துரை ஆகியோர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். திருமதி. க. பரமேஸ்வரன் அவர்கள் ஆசிரியர் பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்காக கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றுள்ளார். திரு. ம. சிவமோகன், திருமதி. அ. தம்பிராசா திரு. வி. நற்குணசிங்கம் திரு.து.இந்திரஜித் ஆகியோர் எம்முடன் புதிதாக இணைந்து கொண்டுள்ளனர் அவர்களையும் இவ்விடத்தில் பாராட்டுகின்றேன்.

## ஆசிரியர் நலன்புரிக்கழகம்

பாடசாலையின் வளர்ச்சியிலும் ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டும் சிறப்பிப்பது ஆசிரியர் நலன்புரிக்கழகமாகும். இக்கழகமானது செல்வி. இ. மதிவதனி ஆசிரியை தலைவராகவும், திருமதி. ம.கி. சற்குணராஜா ஆசிரியை செயலாளராகவும், திருமதி.யோ. ஸ்ராலின் ஆசிரியை பொருளாளராகவும் கொண்டு திறம்பட இயங்கிவருகின்றது. எமது பாடசாலையின் புதிய அதிபராக இணைந்து கொண்ட திரு. அ. இரங்கநாதன் அவர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு ஆசிரியர்களினதும் பிறந்த நாளுக்கு சிறிய அன்பளிப்புப் பொருள் ஒன்றை வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது கழகமானது திரு. பா. செந்தூரன் ஆசிரியரின் மகளின் முதலாவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு அன்பளிப்புப் பொருட்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையில் உள்ளகப்பயிற்சி ஆசிரியராக கடமையாற்றிய தி. பகீரதியின் திருமண வைபவத்தில் கலந்து அன்பளிப்பு பொருட்களை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் கடமையாற்றுகின்ற திரு. ம. சிவமோகன் ஆசிரியரின் தாயாரின் இறுதிக்கிரியையிலும் திருமதி. அ. தம்பிராசா ஆசிரியரின் தந்தையாரின் இறுதிக்கிரியையிலும் கலந்து கொண்டு அஞ்சலிப்பிரசுரம், மலர்வளையம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவி செல்வி செ. கஜநிலானியைப் பாராட்டி பத்திரிகையில் பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இடைநிலை, மேற்பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும்



ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும்

## தர்மசக்தி நிதியம்

தர்மசக்தி நிதியத்தை நிறுவி மாணவர்களின் கற்றலை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் நிறுவுநரின் செல்வமகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களைப் போற்றுகின்றேன். இந்நிதியத்தின் மூலமாகக் கிடைக்கும் நிதி மூலம் இப்பரிசளிப்பு விழாவிற்கான நிதி ஓரளவு ஈடுசெய்யப்பட்டு வருகின்றது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது பதவி வழித் தலைவராக அதிபர் திரு. அ. இரங்கநாதன் அவர்களைத் தலைமையாகக் கொண்டு செயலாளராக திரு. வே. சண்முகநாதன் (பெற்றார்) அவர்களும் பொருளாளராக திருமதி. இ. யோகலிங்கம் ஆசிரியர் அவர்களும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது பாடசாலை நிகழ்வுகள் அனைத்திற்கும் பங்களிப்பு நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் எமது முன்னாள் அதிபர் திரு. ச. சிவானந்தராசா அவர்களின் பிரிவுபசார விழா சிறப்புற நிகழ போதியளவு நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**09.11.2012 அன்று நடைபெற்ற இச்சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டத்தில் செயலாளராக திரு. சு. ஜெகதீஸ்வரன் (பெற்றார்) அவர்களும் பொருளாளராக திருமதி க. பத்மராஜா (ஆசிரியர்) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.**

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் வளர்ச்சிப்படிகளில் உறுதுணையாக இருப்பவற்றில் பழைய மாணவர் சங்கமும் ஒன்றாகும். அந்தவகையில் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலையின் தேவைகளின் போது பல செயற்பாடுகளை முன்னின்று செயற்படுத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே. அந்தவகையில் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு, வருடாந்த நிறுவுநர் நினைவு நாளும் பரிசுத் தினமும் போன்ற விழாக்களுக்கு நிதியுதவி நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் முன்னாள் அதிபரும் தற்போதைய சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. ச. சிவானந்தராசா அவர்களின் பிரிவுபசார நிகழ்வுக்கு நிதியுதவி நல்கி விழா சிறப்புற அமைய உதவி புரிந்தமை பாராட்டுக்குரியதாகும். இச்சங்கத்தின் பதவி வழித் தலைவராக பாடசாலையின் அதிபர் அவர்களும், செயலாளராக திரு. சு. மதிமுகன் அவர்களும்

பொருளாளராக திருமதி பு. திருநாவுக்கரசு ஆசிரியர் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

## உலக உணவுத்திட்டம்

மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் முகமாக உலக உணவுத்திட்டத்தின் மூலம் சத்துணவு வழங்கும் திட்டம் எமது பாடசாலையில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் பொறுப்பாசிரியராக திரு.செ.ஆனந்தீஸ்வரன் (உபஅதிபர்) அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவ்வாண்டு சத்துணவுத்திட்டத்தின் மூலம் பால் வழங்க ஏற்பாடாகியிருந்த போதும் எல்லா மாணவர்களுக்குமான பாலைத் தருவதில் பாற்சபைக்கு ஏற்பட்ட சிரமத்தினால் பால் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்தக் கொள்கின்றேன். மேலும் மாணவர்கள் அனைவருக்கும் பால் வழங்கும் வகையில் ஒரே இடத்தில் பால் பெற்றுத்தர யாராவது ஒருவர் முன்வரவேண்டும் என்பதையும் இவ்விடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

## விசேட கல்வி

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பெருமளவு மாணவர்கள் விசேட தேவையுடைய மாணவர்களாக உள்ளனர். இவர்களின் கல்விச் செயற்பாட்டில் அக்கறை கொண்டு விசேட கல்வி அலகு அமைக்கப்பட்டு மாணவர்களின் கல்வித்தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. இதன் பொறுப்பாசிரியராக திரு.வி.விஸ்ணுகரன் ஆசிரியர் அவர்கள் செயற்பட்டு வந்தார். இவ் ஆசிரியர் தற்போது தற்காலிக இடமாற்றம் பெற்று யா.'.யூனியன் கல்லூரிக்குச் சென்றிருப்பதால் இங்குள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் சிரமப்படுகின்றார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனாலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு விசேட கல்வி ஆசிரியர் இல்லாத போதும் அம்மாணவர்களை அந்தந்த பாடஆசிரியர்களும் வகுப்பாசிரியர்களும் உட்படுத்தல் கல்வி மூலம் கற்பித்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நூலகம்

மாணவர்களது மேலதிக கற்றல் செயற்பாடுகளுக்குக் களம் அமைப்பது நூலகங்களாகும். தற்போதைய சூழலில் மாணவருக்கும் வாசிப்பிற்கும் இடையில் இடைவெளி அதிகரித்து வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். அறிவை மட்டுமல்லாது சுய ஆளுமை விருத்திக்கும் வாசிப்பு மிகுந்த பயனளிக்கும். இந்நூலகத்தின் பொறுப்பாசிரியராக செல்வி.செ.சுகிர்தா ஆசிரியர் செயற்படுகின்றார்.

## வங்கிச் சேவை

எமது பாடசாலையில் வங்கிச் சேவையானது மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. இதன் பொறுப்பாசிரியராக திருமதி. வ. குமாரலிங்கம் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களின் சேமிப்புத் தொகைக்கு ஏற்றவாறு பரிசுப்பொருட்கள் வங்கியினால் வழங்கப்பட்டு வருகின்றது. மக்கள் வங்கி பண்டத்தரிப்பு கிளையினால் இவ்வருடம் சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் எழுது கோல்கள் வழங்கப்பட்டதுடன் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர் தின வாழ்த்துப்பா வழங்கப்பட்டது. மேலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்பெறும் நோக்குடன் நடமாடும் வங்கிச் சேவை இவ்வருடம் இருமுறை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வங்கி இளவாலை கிளையிலும் மாணவர்கள் இணைந்து கொண்டு தமது சேமிப்பை மேற்கொளவதுடன் ஊக்குவிப்பாக பரிசுப் பொருட்களும் பெற்றுக் கொள்கின்றனர்.

## கால்கோள் விழா

பாடசாலை வாழ்க்கையில் முதன் முதலில் கால்பதிக்கும் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்று நடாத்தும் கால்கோள் விழா இவ்வாண்டு திரு.ச.சிவானந்தராசா அவர்களின் தலைமையில் பொறுப்பாசிரியர் செல்வி.ச.சின்னத்துரை அவர்கள் சிறப்பாக நடாத்தினார். சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக்குருக்கள் அவர்களின் ஆசியுடன் கால்கோள் விழா சிறப்பாக நடைபெற்றது. தரம் மூன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவை திருமதி.த.ஞானச்சந்திரன் ஆசிரியர் பொறுப்பேற்று நடாத்தியிருந்தார்.

## மாதா பிதா குரு தெய்வ வழிபாடு

எமது பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நால்வரின் ஆசியும் பூரணமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாதா, பிதா, குரு தெய்வ வழிபாடு நடைபெற்று வருகின்றது. வழமைபோன்று இவ்வருடமும் க:பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கும் இவ்விழா இடம்பெற்றது. சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக்குருக்கள் அவர்களும் இளைப்பாறிய அதிபர் திரு. அ. பேரம்பலம் அவர்களும் அவர்தம் பாரியார் அவர்களும் ஆசிவழங்கினர். இதேபோன்று க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கும் இவ்விழா நடைபெறுவது வழக்கம்.

## மன்றச் செயற்பாடுகள்

மாணவர்களின் ஆற்றல்களுக்கும் ஆளுமைகளுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் இடமாக மன்றச் செயற்பாடுகள் விளங்குகின்றது. அந்தவகையில் எமது பாடசாலையில் இயங்கும் ஒவ்வொரு மன்றமும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கென ஆரம்பக்கல்வி மன்றமும் கனிஸ்ட பிரிவினர்களுக்கென தமிழ் மன்றம், கணித மன்றம், ஆங்கில மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், தொழில்நுட்ப மன்றம், இந்துமாமன்றம், கிறிஸ்தவ மன்றம், உளநல மன்றம், கவின்கலை மன்றம், உயர்தர மன்றம், கணிதமன்றம் , விஞ்ஞான மன்றம் என்பன செயற்பட்டு வருகின்றது. இம்மன்றச் செயற்பாடுகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இடம்பெறுவது வழமையாகும். இதன் பொறுப்பாசிரியராக செல்வி.செ.சுகிர்தா அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

## ஆரம்பக்கல்வி மன்றம்

சின்னஞ்சிறார்களிடையே இலைமறைகாயாக மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர இம்மன்றம் களமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி. க. பத்மராஜா அவர்கள் கடமையாற்றுகின்றார். ஏனைய ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களான திருமதி. பு. திருநாவுக்கரசு, திருமதி.இ.யோகலிங்கம், திரு. ம. சிவமோகன், திருமதி. அ. தம்பிராசா ஆகியோர் உறுதுணையாக இருந்து செயற்பட்டு வருகின்றனர். ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களையும் இத்தருணத்தில் பாராட்டுதல் சிறப்பானது.

தரம் 5 இல் செல்வி.செ.கஜநிலானி திருக்குறள் மனனப்போட்டியில் கோட்டமட்டத்தில் 1ம் இடத்தையும், ஆங்கிலச் சொல்வதெழுதலில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளார். வி. பிரவீனா பண்ணிசைப் போட்டியில் கோட்டமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுள்ளார். செ. ஜயந்தன் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுள்ளார். பரிசில் பெற்ற மாணவர்களுக்கும் வழிநடாத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## சைவ மன்றம்

இந்துமாமன்றம் சைவசமயம் சார்ந்த விழாக்களைச் சிறப்புற நடாத்தி வருகின்றது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி. க. பத்மராஜா செயற்பட்டு வருகின்றார். வருடந்தோறும் இம்மன்றம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் 7ம் திருவிழா உபயத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நவராத்திரி விழாவை முன்னிட்டு பண்ணிசை, மாலை கட்டல்,

கோலம் போடுதல் முதலான போட்டிகள் நடாத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர நாயன்மாரது குருபூசை தினங்கள் மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடு, நடேசர் அபிஷேகம் போன்ற நிகழ்வுகளையும் இம்மன்றம் சிறப்புற நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மன்றம்

மாணவர்களின் மொழித்திறன் விருத்தியை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு தமிழ் மன்றம் செயற்பட்டு வருகிறது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி. மா. உதயகுமார் அவர்கள் செயற்படுகிறார். 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்திறன் போட்டிகளில் பின்வரும் மாணவர்கள் கோட்ட மட்டத்தில் வெற்றியீட்டி உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| ஆக்கத்திறன் வெளிப்பாடு | பிரிவு I | **செ. ஜயந்தன்** | **2ம் இடம்** |
| வாசிப்பு | பிரிவு II | **வி. கௌசிகா** | **1ம் இடம்** |
| பேச்சு | பிரிவு III | **இ. துஷ்யந்தி** | **2ம் இடம்** |
| சிறுகதை ஆக்கம் | பிரிவு IV | **சி. விதுஷனா** | **1ம் இடம்** |
| கவிதை எழுதுதல் | பிரிவு IV | **நா. கம்சிகா** | **3ம் இடம்** |

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் இம் மாணவர்களை வழிநடாத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

## கணித மன்றம்

இதன் பொறுப்பாசிரியராக திரு.பா.செந்தூரன் ஆசிரியர் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். மன்றச்செயற்பாடுகளில் மாணவர்களை அதிகளவு ஈடுபடுத்துவதுடன் கணித பாடத்தைக் கற்பிப்பதில் பல்வேறு புதிய உத்திகளையும் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில மன்றம்

மாணவர்களின் ஆங்கில மொழித்திறன்களை ஊக்குவித்து விருத்தியடையச் செய்யும் நோக்குடன் தவணைதோறும் நடாத்தப்படும் ஆங்கில மன்ற நிகழ்வுகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்துகின்றனர். ஆங்கில மன்றப் பொறுப்பாசிரிராக திருமதி. வ. குமாரலிங்கம் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். ஆங்கில தினப் போட்டிகளிலும் கலை நிகழ்வுகளிலும் திருமதி. அ. யூஜின் சர்மிலானி ஆசிரியரும் இணைந்து மாணவர்களை பயிற்றுவிக்கின்றார். கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் GROUP SONG தரம் 3-4 பிரிவு மூன்றாம் இடத்தையும் தரம் 6-9 பிரிவு முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டதுடன் செல்வி சி. விதுஷனா தரம் 11 Dictation இல் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். போட்டியில் பங்குகொண்ட

மாணவர்களையும் ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் மேலும் வெற்றிகள் பெறவும் வாழ்த்துகின்றேன்.

## சமூக விஞ்ஞான மன்றம்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.வ.இராமச்சந்திரன் செயற்பட்டு வருகின்றார். இம்மன்றத்தினால் சுற்றாடல் சூழல்தினம் சிறுவர் தினம் என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுவதோடு அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில்

| | | |
|---|---|---|
| தரம் - 06 | சு. சுவேதிகன் | 1ம் இடம் |
| தரம் - 07A | தி. சதுர்சனா | 1ம் இடம் |
| தரம் - 08A | ரா. கோகுசன் | 2ம் இடம் |
| தரம் - 09 | இ. பபிதினி | 3ம் இடம் |
| தரம் - 10 | ரா. கபில்ராஜ் | 1ம் இடம் |
| தரம் - 10 | க. கபிலன் | 3 ம் இடம் |
| தரம் - 11 | பா. சுகன்யா | 1ம் இடம் |
| தரம் - 11 | இ. பர்ணபா | 2ம் இடம் |
| தரம் - 12, 13 | சி. கிருஷ்ணவேணி | 1ம் இடம் |
| | செ. ஜெசிமலர் | 2ம் இடம் |
| | சி. சுவேனியா | 3ம் இடம் |

**வலய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி**

இப்போட்டியில் தரம் - 11 இ. பர்ணபா 1ம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## அனர்த்த முகாமைத்துவப் போட்டி

இப்போட்டியில் கோட்ட மட்டத்தில்

| | | |
|---|---|---|
| தரம் - 10 | வி. பிரியங்கா | 1ம் இடம் |
| தரம் - 10 | பா. திலக்ஷனா | 3ம் இடம் பெற்றுள்ளனர். |

இப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## தொழில் நுட்ப மன்றம்

தொழில் நுட்ப மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி.ச. இலட்சியன், திருமதி.பு.திருநாவுக்கரசு, திருமதி.இ.யோகலிங்கம் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

இவ்வருடம் நடைபெற்ற மனைப்பொருளியல் குறுவினாப் போட்டியில் கோட்ட மட்டத்தில் பா. சுகன்யா தரம் - 11ல் தெரிவாகி வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார். இம்மாணவியை வழிநடாத்திய திருமதி.ச.இலட்சியன் ஆசிரியை அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இவ்வருடம் நடைபெற்ற தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப வினாடிவினாப் போட்டியில் கோட்டமட்டத்தில் தரம் -11 சி. விதுசனா முதலாம் இடம் பெற்றுள்ளார். இவரை வழிநடாத்திய திருமதி.இ.யோகலிங்கம் ஆசிரியை அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

## கிறிஸ்தவ மன்றம்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி. ம. கி. சற்குணராஜா, திருமதி. யூ. அன்ரனிராஜா, திருமதி. அ. தம்பிராஜா ஆகியோர் செயற்பட்டு வருகின்றார்கள். குறைந்தளவு மாணவர்களைக் கொண்டு செயற்படும் இம்மன்றத்தினால் ஒளிவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. தபக்காலம், புனித வாரம் தொடர்பான சிறப்பு வழிபாடுகள் இம்மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கத்தோலிக்கத் திருமறைத் தேர்விலும் மாணவர்கள் பங்கு பற்றிப் பரிசுகள் பெறுவதும் சிறப்பானதாகும்.

## உளநல மன்றம்

மாணவர்களிடையே மறைந்து புதைந்து கிடக்கும் திறன்களை வெளிக் கொணரும் வகையிலும், உடல், உள, சமூக, ஆரோக்கியம் பெறும் வகையிலும் உளநல மன்றம் செயற்பட்டு வருகின்றது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.பு.திருநாவுக்கரசு அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவ்வருடம் உலக உள நல நாள் 2012 ஒக். 10 "விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்" என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக குழு நடனம், நாடகம் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு கொண்டாடப்பட்டது பாராட்டுக்குரிய விடயம் ஆகும்.

## கவின் கலை மன்றம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் பாடசாலைகளில் சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற நுண்கலைகள் மாணவர்களுக்கு மிகவும் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது திறமைகளை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டும் விதமாக இந்த மன்றம் செயற்படுகின்றது. இந்த மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திரு. ச. கஜந்தன், திருமதி. ம. கி. சற்குணராஜா, திருமதி. யோ. ஸ்ராலின், திருமதி. ஜி.

விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர். பாடசாலையில் இடம்பெறுகின்ற அனைத்துக் கலை நிகழ்வுகளிலும் நிகழ்வுகள் வழங்குவதில் இம்மன்றம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இந்த வருடம் நடைபெற்ற "உலக உளநல நாள்" நிகழ்வில் மாணவர்கள் ஆக்கபூர்வமான படைப்புக்களை வரைந்து பரிசில்கள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இம்மன்றத்தை நெறிப்படுத்தும் ஆசிரியர்களுக்கும் பங்குபற்றும் மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

மாணவர்களை மதிப்பீடு செய்வதற்குச் சிறந்த ஊடகமாக விளங்குவது பரீட்சைப் பெறுபேறுகளாகும். அவ்வகையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 19 பேர் தோற்றி செல்வகுமார் கஜநிலானி 168 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இப்பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் 15 பேர் பெற்றுள்ளனர். சித்தியடைந்த மாணவியைப் பாராட்டுவதுடன் வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு 32 பேர் தோற்றி 8 பேர் க.பொ.த உயர்தரக் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றனர்.

| | |
|---|---|
| சோபனா பாலச்சந்திரக்குருக்கள் | 8A C |
| டினோஜா பத்மநாதன் | 7A B C |
| வற்சாஜினி சிவானந்தராசா | 5A B 3C |

இம் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளனர். இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோரில் துரைசிங்கம் சுயன் C 2S பெறுபேற்றை பெற்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| A/L | தமிழ் | 70% |
| | நாடகம் | 100% |
| | புவியியல் | 100% |
| | இந்துசமயம் | 100% |
| | சித்திரம் | 100% |

## மாணவர் முதல்வர் அணி

ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களின் ஒழுக்கங்களை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பொறுப்பு மாணவ முதல்வர்களுக்கு உரியதாகும். அவ்வகையில் 11 மாணவ முதல்வர்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| சிரேஸ்ட மாண தலைவன் | - செல்வன் ச. ஜனோஜன் |
| சிரேஸ்ட மாணவ தலைவி | - செல்வி. சி. கிருஸ்ணவேணி |



தேசிய மட்டத்தில் பங்குபற்றிய கரப்பந்து அணி
(19 வயதின் கீழ் ஆண்)



தேசிய மட்டத்தில் பங்குபற்றிய கபடி அணி
(19 வயதின் கீழ் பெண்)



ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களுடன் மாணவ தலைவர்கள்



பாண்ட் வாத்தியக்குழு

## விளையாட்டுத்துறை

இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுத்துறை எமது பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கரப்பந்து 19 வயதின் கீழ் ஆண்கள் அணியினரும் கபடி 19 வயதின் கீழ் பெண்கள் அணியினரும் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் காட்டா குமித்தே ஆகிய கராட்டிப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

எமது பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2012.02.03 ம் திகதி நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக திரு க. சிதம்பரநாதன் சமூக சேவை உத்தியோகத்தர் அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு.வே.சுதாகரன் முகாமைத்துவ உதவியாளர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இதில் மலை மகள் இல்லம் முதலாம் இடத்தையும் அலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும் கலைமகள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

கோட்ட மட்ட மெய்வல்லுநர்ப் போட்டிகளில் நான்கு முதலாம் இடங்களையும் இரண்டு இரண்டாம் இடங்களையும் பெற்றனர்.
வலய மட்டப் போட்டிகளில்

| | | |
|---|---|---|
| கு. வேணுகா | நீளம் பாய்தல் | 1 ம் இடம் |
| து. சுயர்ணியா | உயரம் பாய்தல் | 2 ம் இடம் |
| | 200m | 2 ம் இடம் |

அஞ்சல் நிகழ்வு (4*400) 15 வயதுப் பெண்கள் அணியினர் 3 ம் இடம் பெற்றனர்.

மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் நா.கம்சிகா காட்டா, குமித்தே ஆகிய கராத்தேப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளார். இவரைப் பயிற்றுவித்த முன்னாள் அதிபர் திரு. ச. சிவானந்தராசா அவர்களை இவ்விடத்தில் பாராட்டுகின்றேன்.

**பெருவிளையாட்டுக்கள் வரிசையில்...**

| போட்டிகள் | பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| கரப்பந்து | 15 வ.கீ.ஆ. | 2 ம் இடம் | ... | ... | ... |
| | 17 வ.கீ.ஆ. | 3 ம் இடம் | 2 ம் இடம் | ... | ... |
| | 19 வ.கீ.ஆ. | 1 ம் இடம் | 1 ம் இடம் | 2 ம் இடம் | 2 ம் இடம் |
| கபடி | 15 வ.கீ.பெ. | 1ம் இடம் | 2 ம் இடம் | ... | ... |
| | 19 வ.கீ.பெ. | ... | 1 ம் இடம் | 2 ம் இடம் | 3 ம் இடம் |
| கரம் | 15 வ.கீ.பெ. | ... | 1 ம் இடம் | 4 ம் இடம் | ... |
| கரப்பந்து | 17 வ.கீ.பெ. | 3 ம் இடம் | ... | ... | ... |
| கரப்பந்து | 19 வ.கீ.பெ. | 3 ம் இடம் | ... | ... | ... |

ஆகிய இடங்களைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அனைத்துப் பெருவிளையாட்டுக்களுக்கும் உடற்கல்விப் பொறுப்பாசிரியரான திருமதி.க.பரமேஸ்வரன் ஆசிரியையுடன் திருமதி.வ.இராமச்சந்திரன் ஆசிரியை அவர்கள் இணைந்து செயற்பட்டமை பாராட்டுதற்குரிய விடயமாகும்.

வலய மட்டப் போட்டிகளின் போது திரு.வை.யோகராசா, திரு.வே.சுதாகரன், திருமதி.யூ.அன்ரனிராஜா ஆகியோர் நிதியுதவி நல்கியிருந்தமையும் போற்றுதற்குரியதாகும்.

தேசிய மட்டத்திலான கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செல்வி.து.சுயர்ணியா தெரிவு செய்யப்பட்டார். இக்கிரீடா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கபடிப் பயிற்றுவிப்பாளராகவும் National Youth Service Council பயிற்சி நெறிக்கும் தெரிவு செய்யப்பட்ட து.சுயன் அவர்கள் எமது பாடசாலையின் கபடிப்பயிற்றுவிப்பாளராகவும் செய்றபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சுகாதாரக் கழகம்

பாடசாலைச் சூழலினதும் மாணவர்களினதும் நடைமுறைகளைப் பேணும் வகையில் சுகாதாரக்கழகம் செயற்பட்டு வருகின்றது. இவை தவிர டெங்கு நுளம்பை ஒழிப்பதற்காக சுகாதார அதிகாரிகள் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பொறுப்பாசிரியர்களாக திருமதி.யோ. ஸ்ராலின், திருமதி. வ. இராமச்சந்திரன், திருமதி. ச. இலட்சியன், செல்வி.இ. மதிவதனி, ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இவ்வருடம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் நடாத்தப்பட்ட முதலுதவிப் பயிற்சியில் சுகாதாரக் கழகத்தினுடைய தலைவர், செயலாளர், பொருளாளர் பங்கு பற்றி முதலுதவி பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டனர். இதில் திருமதி. யோ. ஸ்ராலின் ஆசிரியரும் பங்கு பற்றிக் கொண்டார். இதைவிட பாடசாலையில் ஒவ்வொரு மாதமும் ஆசிரியர், மாணவர்களின் மலசலகூடம் கொடுப்பனவின் மூலம் சுத்தம் செய்து வரப்படுகின்றது.

## சாரணியம்

குருளைச்சாரணர், சாரணர், பெண்சாரணியம், சிறுதோழியர் போன்ற சாரணியச் செயற்பாடுகள் நடைபெறுவதன் மூலம் மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடியும்.

## பாராட்டுக்குரியவர்கள்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக நிதியுதவிகளையும் அன்பளிப்புக்களையும் வழங்குவோர் பாராட்டுக்குரியவர்கள் ஆவார். அந்தவகையில் இவ்வருடம் வெளியிடும் மெய்யொளி மலருக்கான நிதியாக ரூபா 40000/= (நாற்பதாயிரம்) தந்து உதவியுள்ள திரு.சிவ.கௌரிபாலன் அவர்களையும் இவ்விடத்தில் போற்றுகின்றேன்.

வைத்தியகலாநிதி திரு.அ.பேரானந்தராஜா அவர்கள் ரூபா பத்தாயிரம் (ரூபா 10000/=) பெறுமதியான ஜே சி செற் தந்து உதவியுள்ளார். வைத்தியகலாநிதி திரு.அ.தனேந்திரன் அவர்கள் பாடசாலைத் தேவையறிந்து Ronio இயந்திரத்தை வழங்கியுள்ளார். இவர்களையும் பாராட்டுகின்றேன். மாணவர்கள் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குச் செல்வதற்காக தேவையான பெருந்தொகைப் பணத்தைத் தந்துதவிய பிரதேச சபைத் தவிசாளர் (தெல்லிப்பளை) திரு.சோ.சுகிர்தன் அவர்கள் ரூபா ஐம்பதாயிரம் (ரூபா 50000=) தந்து உதவியுள்ளார். அவர்களையும் இவ்விடத்தில் போற்றி நிற்கின்றேன்.

## எமது பாடசாலைக்குக் கிடைத்த வளங்கள்

| | | |
|---|---|---|
| Ronio Mechine | | Dr திரு.அ. தனேந்திரன் அன்பளிப்பு |
| புத்தக இறாக்கை | 1 | வலயக்கல்வித்திணைக்களம் |
| ஆசிரியர்மேசை | 1 | வலயக்கல்வித்திணைக்களம் |

# அம்மா

அம்மா என்னை நேசிக்கின்றார்.
அம்மா எனக்கு உணவு தருவார்.
அம்மா என்னை அழகுபடுத்துவார்.
அம்மா எனக்குப் பாடம் சொல்லித் தருவார்.
அம்மாவை நானும் நேசிக்கின்றேன்.

**ப. ஜஸ்மினா**
**தரம் - 1**

---

# மரம் வளர்ப்போம்

மாணவர் நாங்கள் கூடியே
மரங்கள் பல நாட்டிடுவோம்
தினமும் நீரை ஊற்றியே
பெரிதாய் வளரச் செய்திடுவோம்

நிழல் மற்றும் விறகு இன்னும் பல
பயன்கள் இதனால் கிடைத்திடுமே
வாருங்கள் சிறுவர்கள் எல்லோரும்
மரத்தின் பயன்களைப் பெற்றிடவே.

**இ. தனுஜா**
**தரம் - 1**

---

# அப்பா

அப்பா என்னைப் பாடசாலைக்கு அழைத்து வருவார்.
அப்பா என்னில் அன்பு உடையவர்.
அப்பா உழைத்துத் தருவார்.
அப்பா எனக்குப் பாடம் சொல்லித் தருவார்.
அப்பாவில் எனக்கு அதிக விருப்பம்.

**அ. வின்சன்டெயோ**
**தரம் - 1**

முன்னாள் அதிபர் திரு.ச. சிவானந்தராசா அவர்களின்
பிரியாவிடையின் போது... (13. 10. 2012)





திரு. செ. ஆனந்தீஸ்வரன் (கடமை நிறைவேற்று அதிபர்)
தலைமையில் இவ்வாண்டு நடைபெற்ற நிகழ்வுகளில்...






# பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிறந்த நல்ல பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வகை வகையாகப் பூக்கும்

வெள்ளை வர்ண மல்லிகை
வடிவு மிகு ரோஜா
கண்ணைக் கவரும் பூக்கள்
மனதைக் குளிர வைக்கும்

காலையில் மலரும் பூக்கள்
கண் சிமிட்டும் பூக்கள்
கடவுள் பாதம் தூவ
கவலை தீர்த்து வைக்கும்

இ. நிஜாந்
தரம் - 2

---

# நான் விரும்பும் பாடசாலை

- எனது பாடசாலையின் பெயர் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.
- எனது பாடசாலை மிகவும் அழகானது
- அழகிய சிறுவர் பூங்கா, தாமரைத்தடாகம், சரஸ்வதி சிலை, ஏழூரர் சிலை என்பன உண்டு.
- அருள்மிகு நடராஜர் ஆலயம் உண்டு.
- வகுப்பறைகள் மிகவும் அழகானவை.
- எமது அதிபர் திரு. அ. இரங்கநாதன் ஆவார்.
- எமது ஆசிரியர்கள் அன்பாகக் கற்பிப்பார்கள்.
- மாணவர்கள் மிகவும் நட்புடன் பழகுவர்.

சு. குகாஜினி
தரம் - 02

# சிறுதுளி பெரு வெள்ளம்

காலத்தின் நீரோட்டத்தில் பல சோதனைகளைச் சாதனைகளாக்கி உலகம் போற்றும் உத்தமர்களாக வாழ்ந்துவருபவர்களின் பின்னணி ஒவ்வொன்றும் நமக்கு நற்பாடம் புகட்டி நிற்கின்றது என்றால் மிகையல்ல. "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்ற மூதாதையரின் முதுமொழிக்கு இணங்க மூதாதையர்கள் தாம் உழைக்கும் சிறு துளிப் பணத்திலும் ஒரு பங்கை தமது பிற்காலத்திற்கு உதவும் வகையில் சேமித்து வைத்தனர் ஆறறிவு படைத்த மனிதர்களை விட ஐந்தறிவு படைத்த எறும்பிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் நிறையவே உண்டு. ஆம் மாரிகாலத்தில் உணவு தேடுவது சிரமம் என்பதால் எறும்புகள் தேவையான உணவைச் சேமித்து வைக்கின்றன. சைவமயத்தவர்கள் அனுஷ்டிக்கும் விரதம் மூலமும் சேமிப்பின் மகத்துவத்தை அறியமுடிகின்றது. தாவரங்கள், நீர் நிலைகள் என்பவற்றிலிருந்து ஆவியாகின்ற நீர் மேலெழுந்து முகிலாக மாறி மீண்டும் சின்னச்சின்ன மழைத்துளிகளாக பூமியை வந்தடைகின்றது. இந்தச் சின்னச்சின்ன மழைத்துளிகள் பெருவெள்ளமாக மாறி வயல்களுக்குச் சென்று விவசாயிகளுக்குத் துணைபுரிகின்றது. நாமும் இதுபோன்று சிறுபராயத்திலிருந்தே சேமிக்கப் பழகி நல்ல பயன்களைப் பெறுவோமாக.

*சிறுகக்கட்டிப் பெருக வாழ்.*

**செ. கஜநிலானி**
**தரம் - 05**

**பயத்தைக் குறை - நம்பிக்கையைப் பெருக்கு!**
**உணவைக் குறை - உழைப்பைப் பெருக்கு!**
**குடியைக் குறை - மூச்சைப் பெருக்கு!**
**பேச்சைக் குறை - செயலைப் பெருக்கு!**
**வெறுப்பைக் குறை - அன்பைப் பெருக்கு**
**எல்லா நன்மையும் உன்னுடையதாகும்.**

சுவீடன் பழமொழி

# தொலைத் தொடர்புச் சாதனங்களின் நன்மை - தீமை

இன்றைய நவீன உலகிலே தொடர்பு சாதனங்களும் அவற்றின் பயன்பாடுகளும் அதிகரித்துச் செல்கின்றன. தேவைகளுக்கேற்ப கண்டுபிடிப்புக்களும் பெருகிய வண்ணம் உள்ளன. அந்தவகையில் தொடர்பு சாதனங்களாகக் தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம், பத்திரிகை, வானொலி, கணனி போன்றன காணப்படுகின்றன. இவற்றின் மூலம் மனிதனுக்குப் பல நன்மைகளும் சில தீமைகளும் ஏற்படுகின்றன.

தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். அத்துடன் நேரடியாகச்சென்று பார்க்க முடியாத நிகழ்ச்சிகளைப் பார்த்து அறிந்து கொள்ள உதவுகின்றது. பரீட்சை முடிவுகளை உடனுக்குடன் பார்த்துக் கொள்ளலாம். இவைதவிர மனிதனின் வேலைகளை இலகுவாக்கத் தொடர்புச் சாதனங்கள் உதவுகின்றன. மனிதனின் பொழுதுபோக்குச் சாதனமாகவும் விளங்குகின்றன. அத்துடன் அறிவு சார்ந்த விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கும் தொடர்புச் சாதனங்கள் மிக இன்றியமையாததாகக் காணப்படுகின்றன. மேலும் இத்தொடர்புச் சாதனங்களினால் பல நன்மைகள் இருந்தாலும் தீமைகளும் காணப்படுகின்றன மனிதன் சுறுசுறுப்பை இழந்து சோம்பல் அடைவதற்கும் எமது கலாசார விழுமியங்கள் பாழாகப் போவதற்கும் வீண் பிரச்சினைகள் ஏற்படுத்துவதற்கும் மனிதனின் பொன்னான நேரம் மண்ணாக்கப்படுவதற்கும் தொடர்புச் சாதனங்கள் காரணங்களாகின்றன.

**ஜெ. தயானுசன்**
**தரம் - 05**

**கற்ற கலையையும் கற்பித்த குருவையும்
கௌரவிப்பது மாணவருக்குப் பெருமை**

# எமது கடமைகள்

1 ஆடை அணிதல், காலணிகளை அணிதல், தலைவாருதல் முதலானவை எமது கடமையாகும்

2 பாட நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள் என்பவற்றை அவற்றிற்குரிய இடத்தில் வைத்தல் எமது கடமையாகும்.

3 வீட்டில் தாய் தந்தையருக்கு உதவி செய்தல் எமது கடமையாகும்.

4 பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லுதல் ஆசிரியருக்குப் பணிந்து நடத்தல் பாடங்களைக் கற்பிக்கும் போது நன்கு அவதானித்துக் கற்றல் எமது கடமைகளாகும்.

5 தினசரி காலைப் பிரார்த்தனைகளிலும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளுதல் அவசியமாகும்.

6 ஆலயங்கள் அதீனங்கள் மடங்கள் முதலிய வழிபாட்டிடங்களிலும் நூல்நிலையம், பேருந்து நிலையம், வைத்தியசாலை போன்ற பொது இடங்களிலும் அமைதியாகவும் அடக்கமாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

7 எப்போதும் இனிமையாகவும் பண்பாகவும் பேசுதல், பிறருக்குத் தொல்லைகள் தராதிருத்தல் என்பன சிறந்த நற்பண்புகள் ஆகும்.

**மோ. கீர்த்தனா**
தரம் 5

**எல்லோருக்கும் இதயம் ஒரே இடத்தில் இருக்கின்றது.**
**ஆனால் எல்லா இதயங்களிலும் இரக்கம் ஒரே மாதிரி இருப்பதில்லை.**

# பொது அறிவு

1 மிக வேகமாக ஓடக்கூடிய பறவை
- தீக்கோழி

2 கால்கள் அற்ற பிராணிகள்
- மண்புழு, பாம்பு, நத்தை

3 சத்தமிடத் தெரியாத விலங்கு
- ஒட்டகச்சிவிங்கி

4 கூடு கட்டத் தெரியாத பறவை
- குயில்

5 உலகின் சக்கரைக்கிண்ணம் என அழைக்கப்படும் நாடு
- கியூபா

6 இலங்கையில் அதியுயர் மழை வீழ்ச்சி பெறும் இடம்
- வட்டவளை

7 உலகியேயே மிகச்சிறிய நாடு
- வத்திக்கான்

8 உலகில் மிகப்பெரிய தீவு
- கிறீன்லாந்து

9 உலக சாதனைகளைப் பதிவு செய்யும் புத்தகம்
- கின்னஸ் புத்தகம்

10 பூனையைப் போலக் கத்தக் கூடியதும் நாயைப் போலக் குரைக்கக் கூடியதுமான பறவை
- கிவி

11 தலைகீழாகத் தூங்கும் பிராணி
- வௌவால்

12 நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு
- நோர்வே

13 எலியால் பரப்பப்படும் நோய்
- பிளேக்

14 தேயிலையை அறிமுகப்படுத்தியவர் யார்?
- ஜேம்ஸ் செயிலர்

**வீ.பிரவீனா**
தரம் 5

# புதியதோர் உலகம் செய்வோம்

வண்ணமாய் உலகம் செய்வோம்
வளமது கொளிக்கச் செய்வோம்
பண்ணொடு தமிழும் பாடி
பாரினிலே உயரச் செய்வோம்
எண்ணெழுத் திரண்டும் என்பார்
ஏற்றமுற வழிகள் செய்வோம்
தந்தை தாய் பேணிடவே - எட்டு
தாரக மந்திரங்கள் சொல்வோம்

விண்ணைத் தொட்டு நிற்போம்
வீணரை முடித்து நிற்போம்
வேதனை முட்டி நாமும்
விலகிச் செல்வோம்
பாரதி படைத்த பாட்டினை வாழ்வில் ஏற்று
சோதனை பலவும் தாண்டி
புதியதோர் உலகம் செய்வோம்.

**அ. மதுஜன்,** தரம் - 06

---

## கைம்மாறு

தன்னைத் தோண்டுபவனுக்கும்
தண்ணீர் தருகிறது பூமி
தன்னை வெட்டுகிறவனுக்கும்
கனி தருகிறது மரம்
தன்னைக் கசக்கிடும் மனிதனுக்கும்
வாசம் தருகிறது வண்ண மலர்

தன்னை வணங்காதவனுக்கும்
வெளிச்சம் தருகிறது கதிர்!
தான் தேய்ந்தாலும்
தண்ணொளி தருகிறது குளிர் மதி
தன்னை உதைத்திடும் மழலைக்கும்
பாலூட்டுகிறாள் பாசத்தாய்
தான் உருகி மறைந்தாலும்
ஒளி தருகிறது மெழுகுவர்த்தி
மனித இனம் மட்டும் தான்
எதிர்பார்த்து எதையும் செய்யும்!

**கஜநிதன் செல்வகுமார்**
**தரம் - 07A**

# மூன்றின் பெருமை

- முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
- முக்கனி - மா, பலா, வாழை
- முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல்
- முக்காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
- முப்பால் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
- முப்பொறி - மனம், வாக்கு, காயம்
- மும்முரசு - வீரமுரசு, கொடை முரசு, மங்கள முரசு
- மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்
- மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை
- முப்பொருள் - பதி, பசு, பாசம்
- மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை
- முப்படை - தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை
- மூவுலகு - விண்ணுலகு, மண்ணுலகு, பாதாளவுலகு
- முக்குரவர் - தாய், தந்தை, குரு
- திரிகடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி

**இராமச்சந்திரன் கஜகரன், தரம் - 07A**

# வியத்தகு நீர்

புவியில் காணப்படும் எண்ணிறைந்த இயற்கை வளங்களுள் மிகவும் எளியதும் அரியதுமான பல பயன்பாட்டுக் கூட்டுப்பொருள் நீர் ஆகும். இது திண்மம், திரவம், வாயு போன்ற பௌதீக நிலைகளில் காணப்படுகின்றன. புவி மேற்பரப்பில் நீரானது 71% ஆகவும் தரையானது 29% ஆகவும் காணப்படுகிறது. சுமார் 1460000000km$^3$ நீர் நிறைந்து காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

மொத்த நீர் வளத்தில் (100%) 97.3% கடலாகவும் 2.15% பனிக்கட்டி கவிழ்ப்புக்களாகவும் 0.625% நிலத்தடி நீர் ஆகவும் 0.009% ஏரிகள், ஆறுகளாகவும் 0.001% வளிமண்டல நீராவி, முகில்களாகவும் காணப்படுகிறது.

01) அண்டவெளியில் நீர் வளம் நிறைந்த ஒரே ஒரு கோள் பூமி மட்டுமே ஆகும்.
02) இலங்கையில் அதிகமழைபெறும் இடம் வட்டவளை ஆகும்.
03) உலகில் அதிக மழை பெறும் இடம் சீராப்பூஞ்சி ஆகும்.
04) இலங்கையில் அதிக வரட்சியான இடம் மறுச்சுக்கட்டி ஆகும்.
05) உலகில் அதிக வரட்சியான இடம் அட்டகாமாபாலை ஆகும்.
06) இலங்கையில் மிக நீளமான நதி மகாவலி கங்கை ஆகும்.
07) உலகில் மிக நீளமான நதி நைல் நதி ஆகும்.
08) உலகில் மிக உயரமான ஏரி தித்திக்கா ஏரி ஆகும்.
09) மிக உயரமான நீர்வீழ்ச்சி ஏஞ்சல் நீர்வீழ்ச்சி ஆகும்.
10) உலகில் மிக அகலமான நீர்வீழ்ச்சி கோனே நீர்வீழ்ச்சி ஆகும்.

**அ. ஜெசிங்டன்டினோ, தரம் - 8A**

# நூலகம்

தேடத் தேடத் தித்திக்கும்
தேடற்கரிய செல்வம் இங்கே
தேவை மிஞ்சிக் கிடக்கின்றது.

பூமிப் புதையல்கள்
பூப் போன்ற மென்மையுடன்
புத்தக வடிவிலே

சத்தமிட்டுக் கொண்டிருக்கும்
சகல மதங்களும்
சங்கமிக்கும் இடம் இது தான்

வள்ளுவரின் வரிகளும்
பாரதியின் பாடல்களும்
அழியாது காக்கின்ற
ஆலயம் இதுதான்

நிசப்தம் அரங்கேறும் இடங்கள்
இரண்டு ஒன்று கல்லறை
மற்றையது நூலகம்

மௌனத்தையே மொழியாகக் கொண்ட
மானிட வசிப்பிடம்
அலாவுதீனின் அற்புத விளக்காய்
விளங்கும் ஓர் அறிவுச்சாலை

**செல்வி நா.கார்த்திகா**
தரம் 8B

**மனித இனம் பெருந்தன்மையானதுதான்; ஆனால் மனிதர்கள் சிறுமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்**

- ஸ்பெயின் நாட்டுப் பழமொழி

# வாழ்க எம் மெய்கண்டான் அன்னையே

யாழ்ப்பாணத்தின் வடக்கே
யாவரும் போற்றும் இளவாலையில்
தடம் பதித்து உயர்ந்து நிற்கின்றாள்
எம் மெய்கண்டான் அன்னை

அகவை தொண்ணூறு அன்னைக்கு இன்று
அவள் ஆற்றிய பணிகள் அதனிலும் பன்மடங்கு
எழில் மிகு வனப்புடன் கம்பீரமாய் நின்று
எம் கல்விப் பசி தீர்க்கின்றாள் இன்று

எத்தனை எத்தனையோ புத்திஜீவிகளை
எண்ணுதற்கு அரிய கல்வி மான்களை
உருவாக்கி பெருமிதமடைகின்றாள்
புன் சிரிப்புடன் பூரித்து நிற்கின்றாள்

பத்து மாதம் தான் அன்னை சுமக்கின்றாள்
பதின்மூன்று வருடங்கள் மெய்கண்டான் தாய் வளர்க்கின்றாள்
எங்கள் ஒவ்வொரு சாதனையிலும் அன்னையவள் பெருமிதம்
எங்களிற்குள் ஊட்டிடும் மிகுந்த உற்சாகம்

நம்பிக்கை ஒளி ஊட்டி நல்வழி காட்டி
நல் அறிவுபுகட்டி பாதை வகுத்துத் தரும்
வல்ல பல ஆசான்களைத் தன்னகத்தே கொண்டு
நல்லதொரு பிரஜைகளாய் எமை ஆளாக்கி மகிழ்கின்றாள்

இத்தனை நாள் படைத்திட்ட சாதனைகள்
இன்று அனைவரையும் வியக்க வைக்கும்
இனிவரும் காலங்களில் மென்மேலும்
இளமையுடன் சாதனை புரிந்திட வேண்டும் தாயே!

பொலிவுடன் விளங்கும் ஏழூர் வளர்த்த தாயே
பொன்னான உன் சேவை இனிதே தொடர்ந்திட
உந்தன் மழலை நான் இறையருள் வேண்டுகிறேன்
வாழ்க வாழ்கவென என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

பபிதினி இராமச்சந்திரன்
தரம் - 09

# பொது அறிவு

1 தலை இல்லாமல் உயிருடன் ஒன்பது நாட்கள் வாழும் பூச்சி எது?
- கரப்பான் பூச்சி

2 ஜப்பானைத் தாக்கிய முதல் அணுகுண்டின் பெயர் யாது?
- லிற்றில் போய்

3 கரப்பான் பூச்சி எப்போதும் எத்தனை முட்டைகள் இடும்?
- 16 முட்டைகள்

4 நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்க எடுக்கும் வாரம் யாது?
- 3 வாரம்

5 அனைத்துக் கண்டங்களிலும் வசிக்கும் ஒரே ஒரு உயிரினம் எது?
- நாய்

6 புத்த பெருமானைக் குறிக்கும் பெயர் யாது?
- சாக்கிய முனி

7 ஐக்கிய நாடுகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
- ஒக்டோபர் 24

8 தேனீக்கு எத்தனை கால்கள் உண்டு?
- 5

**பா.நிபோஜன்**, தரம் 9

---

# புகழ் பெற்ற நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | உலகில் சுதந்திர தினம் கொண்டாடாத நாடு | - | இங்கிலாந்து |
| 2 | இரு பிரதமர்களால் ஆளப்படும் நாடு | - | கம்பூச்சியா |
| 3 | இரு தேசியக்கொடிகளைக் கொண்ட நாடு | - | ஆப்கானிஸ்தான் |
| 4 | உலகில் தேசியக்கொடி இல்லாத நாடு | - | மசிடோனியா |
| 5 | கடக ரேகையை இரண்டாகப் பிரிக்கும் நாடு | - | இந்தியா |
| 6 | துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு | - | ஸ்பெயின் |
| 7 | உலகில் நடமாடும் திரையரங்கு உள்ள நாடு | - | வடகொரியா |
| 8 | கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நாடு | - | டென்மார்க் |
| 9 | வாலில்லாத பூனைகள் அதிகம் உள்ள நாடு | - | ஐஸ்லாந்து |
| 10 | புன்னகை நாடு என அழைக்கப்படும் நாடு | - | தாய்லாந்து |

**சு.சுவீஸ்ரன்**, தரம் 9

# வருடங்களின் நிறைவு விழாக்கள்

| | |
|---|---|
| முதல் வருட நிறைவு | - காகித விழா |
| இரண்டு வருட நிறைவு | - பருத்தி விழா |
| மூன்று வருட நிறைவு | - தோல் விழா |
| நான்கு வருட நிறைவு | - பழு விழா |
| ஐந்து வருட நிறைவு | - மர விழா |
| ஆறு வருட நிறைவு | - இரும்பு விழா |
| ஏழு வருட நிறைவு | - செம்பு விழா |
| எட்டு வருட நிறைவு | - வெண்கல விழா |
| ஒன்பது வருட நிறைவு | - மண்கல விழா |
| பத்து வருட நிறைவு | - தகர விழா |
| பதினொரு வருட நிறைவு | - உருக்கு விழா |
| பன்னிரண்டு வருட நிறைவு | - லினன் விழா |
| பதின் மூன்று வருட நிறைவு | - பின்னல் விழா |
| பதினான்கு வருட நிறைவு | - தந்த விழா |
| பதினைந்து வருட நிறைவு | - பளிங்கு விழா |
| இருபதாவது வருட நிறைவு | - பீங்கான் விழா |
| இருபத்தைந்தாவது வருட நிறைவு | - வெள்ளி விழா |
| முப்பதாவது வருட நிறைவு | - முத்து விழா |
| நாற்பதாவது வருட நிறைவு | - மாணிக்க விழா |
| ஐம்பதாவது வருட நிறைவு | - பொன் விழா |
| அறுபதாவது வருட நிறைவு | - வைர விழா |
| எழுபத்தைந்தாவது வருட நிறைவு | - பவள விழா |
| எண்பதாவது வருட நிறைவு | - அமுத விழா |
| நூறாவது வருட நிறைவு | - நூற்றாண்டு விழா |

**பா. நிரோசனா**
**தரம் - 09**

# சிறுவர் உரிமை மீறல்கள்

"இன்றைய சிறுவர்கள் நாட்டின் நளைய தலைவர்கள்" என்ற வாக்கியம் இன்று உலகம் முழுவதும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் ஐந்து வயது தொடக்கம் பதினெட்டு வயது வரையானவர்கள் சிறுவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். இச்சிறுவர்களை இன்பஒளி, அறிவு ஊற்று, அன்பின் வடிவம் என்று பலவாறு வர்ணித்துக் கூறமுடியும். இச்சிறுவர்களின் பெறுமதி அளவிட முடியாதது. இன்று சர்வதேச ரீதியாக ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இச் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருடமும் "சிறுவர் உலகம் சிறுவர்க்கே" என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்பட்டது. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. சிறுவர்களின் உரிமைகளாவன அன்பு, பாதுகாப்பு, உணவு, கல்வி, சுகாதார மருத்துவம் என்பனவாகும்.

இச் சிறுவர்களிற்கு அடிப்படை உரிமைகளில் ஒன்றான கல்வி முக்கியமாக அளிக்கப்படல் வேண்டும். ஏனெனில் இக்கல்வி அறிவு சிறுவர்களின் எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டுகின்றது. இக் கல்வியை வழங்குவதற்கு பெற்றோர்கள் ஆசிரியர்கள், பெரியோர்கள், பாடசாலைச் சமூகம் என்பன உறுதுணையாக இருந்து இச் சிறுவர்களிற்கு சிறந்த வழியைக் காட்ட வேண்டும்.

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தினிலே இச்சிறுவர்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு வகையான வேலைகளிற்கு அமர்த்தப்படுகின்றனர். இதன் காரணமாக இவர்களின் கல்வி பாதிப்படைகிறது. இதற்கு வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை என்பன முக்கிய காரணங்களாகும். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் இடங்களில் பல அசௌகரியங்களுக்கும், துன்புறுத்தல்களிற்கும் உள்ளாக்கப்படு கின்றனர். இது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

இன்றைய காலகட்டத்தில் மிக மோசமானதும் மிலேச்சதனமானதுமான செயலாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது. இது பற்றிய செய்திகள் அடிக்கடி தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் என்பவற்றில் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. பாலியல் துன்புறுத்தலுடன் மட்டும் நின்றுவிடாது சித்திரவதை செய்தல் கொலை செய்தல் போன்றவையும் சர்வசாதாரண நிலைமைகள் ஆகிவிட்டன. இதனூடாகப் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. இதன் விளைவு இவர்களின் எதிர்கால வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கிவிடும். இக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களிற்கு சட்டத்தின் ஊடாக மிகக் கடுமையான தண்டனை அளிக்கபடல் வேண்டும்.

அடுத்துச் சினிமாவின் ஊடாகவும் தொடர் நாடகங்களின் ஊடாகவும் கேட்டும் பார்த்தும் அறிந்த நிகழ்ச்சிகளில் ஒன்று பணத்திற்காகச் சிறுபிள்ளைகளைக் கடத்துவதாகும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நமது

பிரதேசங்களில் ஆங்காங்கே கடத்தல்கள் நடந்த வண்ணமே உள்ளன. அனேகமாக பணக்காரர்களின் பிள்ளைகளே இவ்வாறு கடத்தப்படுகின்றனர். சிறுவர்களைக் கடத்துபவர்களிற்கு பணம் கிடைக்காதவிடத்து சிறுபிள்ளைகள் கொலையும் செய்யப்படுகின்றனர்.

இன்று பலராலும் பேசப்படுகின்றதும் தினம் தினம் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையங்கள் என்பவற்றின் ஊடாக எங்கள் விழிகளுக்கும் செவிகளுக்கும் எட்டக் கூடியதாக உள்ள செய்தி போதைப்பொருட் பாவனையும் போதைப் பொருட் கடத்தலுமாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே. போதைப் பொருட்களினால் நோய்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சமூகத்தவரினால் ஒதுக்கப்படுகின்றனர். இதன் மூலம் அச்சமூகத்தின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தடைப்படுகிறது. சிறுவர்களின் சுதந்திரம், கல்வி, பாதுகாப்பு என்பன கேள்விக்குறியாகின்றன.

சிறுவர் உரிமை மீறல்கள் என்ற வாக்கியம் இன்று சிறுவர்களிற்குப் பெரிதும் சவாலாக உள்ளது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்தாம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையினால் சிறுவர் தொடர்பான உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு சர்வதேச நாடுகள் சிறுவர் உரிமைகளிற்கு ஆதரவு வழங்கின. இன்று இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் யுனிசெப் நிறுவனம் சிறுவர்களின் உரிமைக்காகப் பெரிதும் பாடுபடுகின்றது.

சிறுவர்களின் கடமைகளாவன பெரியோரை மதித்தல், பொதுச் சொத்துக்களைப் பேணுதல் பிறருக்கு உதவி செய்தல், பெரியோர் சொற்கேட்டல், அதிபர் ஆசிரியர்களிற்குக் கீழ்ப்படிதல் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றுதல் என்பனவாகும். “சிறுவர்கள் தங்களது கடமைகளைச் சரியாகச் செய்தால் உரிமைகள் தானாக வந்து சேரும்”

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய ஆர்வலர்களிற்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும். எனவே இதனைச் செயற்படுத்த தகுந்த அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும். சிறுவரின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுவதற்கு சமூகத்து மனிதர்கள் முன்வர வேண்டும். சட்ட அதிகாரிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

சிறுவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைவோம். அவர்களின் எதிர்கால வாழ்விற்கு வழி அமைப்போம்.

**வீ. பிரியங்கா**
**தரம் 10**

# நீளப்பெருவாயின் அறிவுப்பொக்கிஷம்

நீளப் பெருவாயின் அறிவுப் பொக்கிஷமாய்
எங்கள் நினைவுகளில்
நிலைத்திருப்பீர்கள் - நீங்கள்
வாழ வழி தெரியாத விடலைகள் பலருக்கு
மலையேறிச் செல்லும் வழிகாட்டிய
ஒளியேறு நீங்க ளென்றால்
அது மிகையாகாது
ஏழூர் என்கின்ற ஒரு எளிமையான
நிலவுக்குள்
எத்தனை வலிமையிருக்கிற தென்று
இயம்பி விட்டு சென்றிருக்கிறீர்கள்
சைவத் தோடு இங்கே
செந்தமிழ் வாழுதென்றால் அச்
சிறப்பெல்லாம் நின் பாதக்கமலங்களுக்கு
மட்டுமே
ஏழூரான் புகழ்தனை - வெறுமனே
எழுதி விட்டுச் செல்வதற்கு
இளவாலை மெய்கண்டான்
உயிரில்லாப் பொருளல்ல
எங்கள் உயிரோடு
கலந்திருக்கும் உங்கள் உயிர் மூச்சு இது ஐயா
ஏட்டிற்குள் அடங்காத
பாடப் புத்தகம் நீங்கள்
ஏழைகள் பலருக்கு
எழுத்தறிவித்து - கல்விச்
சாலைகளை யமைக்க
வழி செய்த வல்லவரே
கார்த்திகைத் திருநாளில்
காற்றிலே கலந்து விட்ட
தங்களது
பாத மலரடிகள்
பணிகின்றோம்
"வாழ்க ஏழூரான் புகழ்
வாழ்க இளவாலை மெய்கண்டான்.

அ. மதுர்ஷா
தரம் - 10

# என் ஊரின் சில ஞாபகங்கள்

இரவு முழுவதும் பெய்த பனியினால்
இலையில் இருந்து சொட்டிவழியும்
பனித்துளி......

வானொலியின் அலை வரிசையில்
வாசல் தோறும் ஒலிக்கும்
தலைப்புச் செய்திகள்

முற்றத்தில் நட்டிருந்த
நித்திய கல்யாணியும் செவ்வரத்தையும்
வேலிக்குக் கதியாலாகப் போட்டிருந்த
பூவரசம் கதியாலும்

நலம் விசாரிக்கும் பக்கத்து வீட்டு
நண்பிகளின் உரையாடலும்
இடுப்பில் குடத்துடன் நடந்து சென்று
தண்ணீர் அள்ளிய கிணறும்

அழகாகக் கூட்டிய முற்றத்தில்
நடந்து சென்று அடுப்பு மூட்டி
தேநீர் வைத்துத் தந்த
அம்மாவின் கைகளும்

காலை ஏழு மணியென்றால்
கதிரவனின் ஒளியில் காற்று
ஒலியைத் தரும் தம்பிரான்
காண்டாமணி யோசையும்

வெள்ளைப் புறாவைப் போல்
வெள்ளைச் சீருடையுடன்
வீதியிலே பறந்து செல்லும்
பள்ளிச் சிறார்களையும்...

இப்படிப் பல சுவாரசியமான
என் ஊரின் நினைவுகளை
நீட்டியபடி நானிருக்க

இன்றைய மீள்குடியேற்ற
வாழ்க்கை என்னுடைய
எண்ணங்கள் ஆக்கிரமித்து

நிகழ்கால வாழ்வின் பக்கம்
என்னுடைய கண்ணோட்டத்தை
மெதுவாகத் திருப்ப
இதயத்தின் வலிகள் பல...

வேலையற்ற தந்தை
காயத்தின் வலிகளில் அன்னை...
கல்வியை இடைநிறுத்திய அண்ணா...
காணமல் போனோர் பட்டியலில்
கால் பதித்த தம்பி

முப்பது வயதைத் தாண்டியும்
முதிர் கன்னியாய் இருக்கும் அக்கா
ஓலைக் குடில் வீடு
ஒழுகுகின்ற கூரை

குளிக்கச் செல்லும் கிணறு - அங்கே
சில பேரின் கோரப் பார்வை
கால ஓட்டத்தில் ஏறிவரும் விலைவாசி

இவ்வாறு என் எண்ணங்கள் இருக்க
அடுப்பில் வைத்த கறி ஞாபகம் வர
எழுந்தேன் என் ஞாபக
வலிகளை விட்டு...

**றா. நிலக்ஷனா**
**தரம் - 10**

# கண்டிப்பு

"ரமேஸ் எங்க அவன் அடுத்த வீட்டு தம்பித்துரையின்ர பொடிய அடிச்சுப் போட்டானாம்". என்று மனைவியிடம் கூறியவாறு வீட்டினுள் சென்றார் சிதம்பரம்.

தந்தை வந்து விட்டதை அறிந்த ரமேஸ் அடுத்த அறையில் இருந்து மெதுவாக நழுவி பின்பக்கம் செல்லத் தொடங்கினான்.

ரமேஸ் ஐந்தாம் ஆண்டு படிக்கும் மாணவன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்பதால் செல்லமாக வளர்க்கப்பட்டான். ரமேஸின் அம்மா அவன் மீது அளவு கடந்த அன்பை வைத்திருந்தாள். அப்பாவும் அப்படித்தான் எனினும் அன்பைக் காட்டுவதிலும் கட்டுப்பாடும் கண்டிப்பும் உள்ளவர். ரமேஸின் அடாவடித்தனத்தால் பல ஊர் வம்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலமைக்கு ஆளாகியிருக்கின்றார். இன்றும் அப்படித்தான் பக்கத்துவீட்டு தம்பித்துரையின்ர பையனுடன் சேர்ந்து விளையாடியதில் ஏற்பட்ட சண்டையில் ரமேஸ் பெட்டால் அடித்து அப்பையனின் மூக்கை பதம் பார்த்துவிட்டான். அதன் பிறகு தம்பித்துரை அய்யோ முறையோ என ஊரைக்கூட்டி ரமேஸின் அப்பாவிடம் நாக்கை பிடுங்கிற மாதிரி நாலு கேள்வியைக் கேட்டு விட்டு சென்றார் அதன் விளைவுதான் இது.

முன்பக்கமாக ரமேஸைக் காணாமல் சமையலறைப்பக்கம் சென்ற சிதம்பரம் அங்கே கண்ணை மூடி அமர்ந்திருக்கும் பூனையைப்போல ஒடுங்கி நின்ற அவனைக் கண்டு கொண்டார். ஏனடா தம்பித்துரையின் மகனை அடிச்சனி என்று உறுமினார். ரமேஸ் பயத்துடன் அவரைப்பார்த்தவாறு மௌனமாக நின்றான். என்னடா நான் கேக்கிறது உன்ரை காதில விழவில்லையோ இல்லையப்பா... அவன்தான் எனக்கு முதல்ல அடிச்சவன் என்று விம்மினான். அப்ப அவன் அடிச்சால் அவன்ர மூக்கை உடைக்கிறதோ? இப்ப அவன்ர அப்பன் என்ர மானத்தைப் பிடுங்கி எடுத்திட்டான். உனக்கு எத்தனை தடவை சொன்னனான் கண்டகண்ட பையன்களோடு சேர்ந்து ஊர்க்கன்றாவி யெல்லாத்தையும் வீட்டுக்கு கொண்டு வராதயெண்டு? என்று அவனை நாலு சாத்து சாத்தினார், ரமேஸ் ஓவென அழுதான்.

பாவம் அவன் தெரியாமல் செஞ்சிட்டான் அவனை அடிக்காதேங்கோ என ரமேஸின் அம்மா அப்பாவிடம் சிபாரிசு செய்தாள்.

சரி சரி நான் அடிக்கேல நீதான் உந்தப்பிள்ளையை கெடுக்கிறது என்னாவது செய்யுங்கோ என்று இரைந்து கொண்டு வெளியேறினார்.

ரமேஸ் ஒரு மூலையில் குந்தி இருந்து விம்மி விம்மி அழுதான் அப்பா அடித்தது வலித்தது. ஆனால் அவர் எதற்காக அடித்தார் என்பதை எண்ணிப் பார்க்காத அவன் சே இவருக்குப் போய் மகனாகப் பிறந்தேனே எடுத்தாலும் குற்றம் வைத்தாலும் குற்றம் எதைச் செய்தாலும் அடிக்கிறதுதான் இவருக்கு வேலையாகப் போச்சு முகுந்தன்ர அப்பா எவ்வளவு நல்லவர் அவர் என்ன செய்தாலும் அடிக்கிறதேயில்லை அவனோட அவரு எவ்வளவு இரக்கம் என்டை அப்பா மட்டும் தான் என்னை கொடுமைப்படுத்துகிறார் என்று எண்ணினான்.

சிதம்பரம் ஓர் ஆசிரியர். அவருடைய மனம் எப்போதும் தனது மகன் ரமேசை ஒரு நல்ல பிள்ளையாக வளர்க்க வேண்டும். அவனை எதிர்காலத்திலே நல்லவனாக வாழ வைக்க வேண்டும் என ஆயிரம் திட்டங்களைத் தீட்டியது. அதன் காரணமாக அவன் மீது மிகுந்த அன்பும், அக்கறையும், கண்டிப்பும் கொண்டிருந்தார். அவனது தவறுகளை திருத்த சிலவேளைகளில் அடிப்பதும் உண்டு. அவற்றை ரமேஸ் தப்பாகப் புரிந்து கொண்டு தன் அப்பாவை பொல்லாதவர் என்று எண்ணத் தொடங்கினான்.

நாட்கள் பல உருண்டோடின ரமேஸின் துடிப்புத்தனமும் குறைந்த பாடில்லை அது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனது அன்று ஒருநாள் அடைமழை சோவெனப் பெய்தது மின்னல் கண்ணைப் பறிக்க இடி இதயத்தைப் பிளந்தது தாயைக் கண்ட பசுக்கன்றைப்போல ரமேசும் அவனுடைய நண்பர்களும் அந்த அடைமழையில் துள்ளிக்குதித்து விளையாடினர். ஆடிப்பாடிக் கும்மாளம் இட்டனர். அன்றிரவு படுக்கைக்கு சென்ற ரமேஸ் குளிரால் நடுங்கினான். உடம்பு சரியாகக் கொதித்தது காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. அருகில் சென்று அவனைத் தொட்டுப் பார்த்த அப்பா " படிச்சுப்படிச்சுச் சொன்னனான் மழையில் நனையாதே என்று" இப்ப பார் காய்ச்சலால் அவதிப்படுகிறாய் என்று வருந்தினார்.

மறுநாள் காலை ரமேஸின் மேலெல்லாம் நடுக்கம், கூட காய்ச்சலும் வாந்தியும் அவனை வாட்டின. அவனைப் பார்த்த அவனது அப்பா சிதம்பரம் அவனை சைபிக்கிளில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்.

நீண்ட நேரம் வரிசையில் நின்று "டாக்டரிடம்" காட்டினார். அவனை நன்றாக சோதித்த "டாக்டர்" "உங்கட மகனுக்கு காய்ச்சல் ரொம்ப அதிகமாகக் காயுது இவரை வாட்டிலை சேர்க்க வேணும் ஒரு கிழமை நன்றாகக் கவனிக்க வேணும்" என கூறி முடித்தார்.

எல்லாவற்றிற்கும் தலையாட்டிய சிதம்பரம் அவனை வாட்டில் கொண்டு போய்ச் சேர்த்தார். ஒரு கிழமையாக வாட்டில் இருந்து ரமேஸை கவனித்தார். ஓடி ஆடித் திரிந்தவன் படுத்த படுக்கையாய் கிடக்கிறதைப் பார்க்க ரமேஸின் அப்பாவிற்கு நெஞ்சில் உதிரம் கொட்டியது. ரமேஸ் விழித்தெழும் போதெல்லாம் "ரமேஸ் இப்ப எப்படி இருக்கு தம்பி இப்படி இளைச்சுப் போட்டியே" என்று அவனின் தலையைத் தடவுவார்.

ரமேஸிற்கு தனது தவறுகள் தெரிய ஆரம்பித்தன தான் தனது அப்பாவை மனதுக்குள் ஏசியதை எண்ணி எண்ணி வருந்தினான். தனக்கு கடவுளாக பார்த்துத் தண்டனை கொடுத்திருக்கிறார் என்று நினைத்து மனம் வாடினான். அத்தோடு அவனின் தந்தையும் ரமேஸ் நான் உன்னை அடிக்கிறது உனது நன்மைக்காகத் தான் இப்படி ஒரே அடியாக வீட்டில் இருக்கிறாய் ஓடியாடித் திரிவாய் இப்ப படுத்த படுக்கையாகக் கிடக்கிறியே என்று புலம்பினார்.

ஏற்கனவே மனம் திருந்திய ரமேஸ் தந்தையின் இவ்வன்பு மொழியைக் கேட்டு கண்ணீர் சிந்தினான். தன் தந்தையின் பாசத்தின் ஆழத்தை உணரத் தொடங்கினான். தனது தந்தையிடம் அப்பா... என்னை மன்னிச்சிருங்கப்பா நான் தெரியாமல் தப்புகள் பண்ணிட்டேன் நீங்க எனக்கு அடிக்கிற போதெல்லாம் நான் உங்கள மனசுக்குள் திட்டுகிறனான். ஆனா நீங்க எனக்கு இப்ப காய்ச்சல் வந்ததும் எப்படி துடிக்கிறீங்க? அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதை புரிஞ்சு கொண்டேன் எனக் கூறியவனாகத் தந்தையை அணைத்துக் கொண்டான்.

**பா. திலக்ஷனா**

**தரம் - 10**

---

***இரவும் பகலும் சிறைச்சாலை அடைத்தே இருக்கிறது ஆயினும் அது எப்போதும் நிறைந்தே இருக்கிறது. ஆலயங்கள் எப்போதும் திறந்தே இருக்கிறது. ஆனால் அவற்றில் ஆட்களே இல்லை.***

- இந்திய பழமொழி

# பிரியாத நட்பு

வயலூர் என்பது ஓர் அழகிய கிராமம். அக்கிராமத்திலே வயல் வெளிகள், புல் நிலங்கள், மரம், செடி, கொடிகள் போன்றவை மனதுக்கு இதமளிக்கும் விதத்தில் அழகாகக் காட்சியளிக்கின்றன.

அப்படியான ஒரு கிராமத்திலேதான் வாணி என்பவளின் வீடு அமைந்துள்ளது. அவள் படிப்பிலும் ஒழுக்கத்திலும் திறமையானவள். அன்பு காட்டுவதிலும் உதவி செய்வதிலும் முன்னிற்பவள். இப்படிப்பட்ட நல்ல குணங்களைக் கொண்ட வாணிக்கு பூஜா என்றொரு நல்ல நண்பி இருந்தாள். வாணியோ கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள் ஆனால் பூஜாவோ பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். இருவரும் ஒரே பாடசாலையிலே ஒரே வகுப்பிலே கல்வி கற்கிறார்கள். வாணி தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வாள். அவளது நண்பி பூஜா தினமும் சைக்கிளில் செல்வாள். வகுப்பிலே தினமும் இருவரும் ஒன்றாகவே அருகருகில் அமர்ந்து கொள்வார்கள். தெரியாத விடயங்களைக் கலந்தாலோசித்துத் தெளிவடைந்து கொள்வார்கள். இடைவேளையிலே சாப்பிடும் போது கூட எந்தவித வேறுபாடும் காட்டாமல் சேர்ந்தே சாப்பிட்டுக்கொள்வார்கள். பாடசாலை முடிவடைந்ததும் பூஜா தனது துவிச்சக்கரவண்டியில் வாணியையும் ஏற்றி வந்து வரும் வழியில் இறக்கி விட்டுச் செல்வாள். இவ்வாறே இவர்கள் இருவருக்கிடையேயும் இருந்த நட்பின் நெருக்கம் அதிகரித்துச் சென்றது.

வாணியின் குடும்பக் கஸ்டங்களுக்காகவும் பூஜா உதவிபுரிபவள். இந்த நட்பு முறையின் நெருக்கம் பூஜாவின் பெற்றோர்களுக்குத் தெரியவந்தது. இவர்கள் உயர்ந்த பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகையால் வாணி பூஜா மீது கொண்டிருக்கும் நட்பு அவர்களுக்குப் பிடிக்கவில்லை. வாணி மீது தொடர்ந்தும் நட்புக் கொண்டிருந்தால் வேறு பாடசாலைக்கு மாற்றி விடுவதாக பெற்றோர்கள் பூஜாவிற்கு எச்சரிக்கை விடுத்தனர்.

மறுநாள் இருவரும் பாடசாலையில் சந்தித்தனர். பெற்றோர் சொன்னதைப் பொருட்படுத்தாது பூஜா தொடர்ந்தும் நட்புடன் செயற்பட்டாள். இந்த விடயம் மீண்டும் அவளது பெற்றோருக்குத் தெரியவந்தது. பூஜாவை வேறு பாடசாலைக்கு மாற்றப்போவதாக கூறினர். இந்தவிடயம் வாணிக்கும் தெரியவந்தது. பூஜாவைச் சந்தித்து பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறி பெற்றோர்கள் சொன்னதைப் போன்று வேறு பாடசாலைக்குச் செல்லுமாறு கூறினாள். "எமக்குள்ளே நீண்ட இடைவெளி இருந்தாலும் நமது நட்பிற்கு இடைவெளி கிடையாது நாளுக்கு நாள் நெருக்கமடைந்தே செல்லும்" என்ற சிறிய தத்துவத்தையும் வாணி பூஜாவிற்குக் கூறினாள். இவற்றைக்கேட்ட

பூஜா பாடசாலை மாறுவதற்கான சம்மதத்துடன் வாணியிடம் இருந்து விடைபெற்றுச் சென்றாள்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகியும் வாணியும், பூஜாவும் சந்திக்கவே இல்லை. ஆனாலும் அவர்களுடைய நட்புத் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒருநாள் திடீரென ஏற்பட்ட வாகன விபத்தின் காரணமாக பூஜா வயலூர் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக பூஜாவின் தம்பியிடம் இருந்து வாணி அறிந்து கொண்டாள். இச் செய்தியைக் கேட்டு மிகவும் கலக்கமடைந்தாள். ஓடோடிச் சென்று தனது தாயாரையும் அழைத்துக்கொண்டு பூஜாவைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றாள். அங்கே சென்றபோது "பூஜா அதிக குருதியை இழந்துள்ளதாகவும் உடனே குருதி வழங்கப்படாவிடின் உயிர் பிழைப்பது கஸ்டம்" என்று மருத்துவரின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. உடனே வாணி தாயாரின் அனுமதியுடன் தனது குருதியைப் பரிசோதித்தபோது அது பூஜாவின் குருதியினத்தை ஒத்ததாகவே இருந்தது. சற்று நேரமும் தாமதிக்காது தானே பூஜாவிற்குக் குருதியை வழங்கினாள். சுமார் ஒரு மணி நேரத்தின் பிற்பாடு "பூஜா உயிர்பிழைக்க மாட்டாள்" என்று கூறிய அதே மருத்துவரின் வாயால் "பூஜா உயிர்பிழைத்து விட்டாள்" என்ற நல்ல செய்தி பரவியது. இச் செய்தியைக் கேட்டு பூஜாவின் பெற்றோர்கள் மகிழ்வடைந்தார்கள். இவ்வாறு பூஜா உயிர் பிழைப்பதற்குக் காரணம் வாணி மட்டும் தான் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

அதன் பின்னர் மனித குலத்தினிடையே உயர்வு, தாழ்வு இல்லை என்பதையும் நட்பிற்கு இடைவெளியும், பிரிவும் கிடையாது என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டு தொடர்ந்தும் வாணியும், பூஜாவும் நண்பர்களாகவே இருக்குமாறு பெற்றோர்கள் கூறி அவர்களை வாழ்த்தினர்.

**"உண்மையான நட்பு ஒருபோதும் பிரிவதில்லை"**

**இ. சுதர்சினி**
**தரம் - 10**

---

**குழந்தை தன்னை தூக்கி வைத்துக் கொஞ்சுகிறவரைத்தான் அறியும்.**
**தன்னிடம் உண்மையான அன்பு செலுத்துபவரை அறியாது.**

- வேல்ஸ் நாட்டுப் பழமொழி

# இலட்சியம்

"டேய் ரவி எப்பபடி இருக்கிறாய் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது. ஏனடா சாப்பிடுவதில்லையே. உடம்பு இப்படி மெலிந்து விட்டது" என்று அடுக்கிக் கொண்டே போனான் சுரேஸ். எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

"ஆ நான் இருக்கிறேன் நீ" என்று இழுத்தேன் "டேய் நான் இன்றைக்கு காலம தான் வந்து சேர்ந்தனான். நீ ஆசைப்பட்ட மாதிரி உனக்கு ஒரு விளையாட்டுக் ஹெலிகொப்டர் வாங்கி வைத்திருக்கிறேன் வாடா" என்று கிண்டல் பண்ணினான்.

"சும்மா போடா சின்ன வயதில் ஏதோ தெரியாமல் சொன்னால் நீ இப்ப வாங்கி வந்து என்னை அசிங்கப்படுத்துகிறாய்" என்று அவனுக்குப் பதிலளித்தேன்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு நானும் சுரேசும் ஒன்றாகத்தான் படித்தோம். படிக்கும் போது அவன் செய்த குறும்புகள் சொல்லிலடங்கா. எப்போதுமே சிரித்துக் கொண்டிருப்பான். மற்றவர்களையும் சிரிக்க வைப்பான் வஞ்சகமில்லாவன். சங்கீதம் என்றால் அவனுக்கு உயிர், நன்றாகப் பாடுவான், இசையமைப்பான், தான் சொந்தமாகவே இசைக்கருவிகள் வைத்திருந்தான் அன்றொருநாள்.

"டேய் இந்த ஆங்கிலப்பாட வாத்தியாரோட பெரும்பாடாக்கிடக்கு இண்டைக்கு அவருக்கொரு வழி பண்ண வேணும்" என்று சுரேஸ் கூறினான். அவன் சொல்வதும் சரிதான். அவர் வகுப்பிற்குள் வந்தாலே போதும் அரைவாசி நேரம் தூக்கம் தான் தூக்கத்தில் அவர் கும்பகர்ணன் ஆசிரியர் வகுப்பிற்குள் வந்தார். கேள்வி கேட்டு சுரேசை கரும்பலகையில் விடையெழுத சொன்னார். அவன் போனான் ஆசிரியரின் கண்கள் மூடவும் அவன் எல்லாரையும் வகுப்பிற்கு வெளியில் செல்லும்படி சொல்ல நாங்களும் போய் விட்டோம். விஷயம் தலைமை ஆசிரியர் வரைக்கும் போனது ஆங்கில வாத்தியார் பிறகு சுரேசோட கடுங்கோபம்.

ஒருநாள் பாடசாலையில் ஒரு கூட்டம் நடந்தது. சுரேஸ் கிறிஸ்தவப் பையன், நான் இந்து அப்போது இறைவணக்கம் நடந்தது. கிறிஸ்தவ கீதம் இசைக்கும் போது சுரேஸ் சேர்ந்து பாடுவான் என்று நான் நினைத்தேன். ஆனால் அவன் என்னைத் திரும்பிப் பார்த்து கிள்ளி விளையாடினான். பின்னர் இந்துக்களின் தேவாரம் நிகழும் போது தானும் சேர்ந்து பாடினான். எனக்கோ ஆச்சரியம் அவனிடமே கேட்டேன்.

“டேய் என்னடா நீ உன்ர சமயத்தைப் பாடாமல் எங்கட தேவாரம் பாடுகிறாய்”

“அப்ப நான் பாடக்கூடாதே. டேய் கடவுள் ஒன்று தான் எப்படி வழிபட்டாலும் கடவுள் ஏற்றுக்கொள்வார்” என்று தத்துவம் பேசினான். ஆனாலும் அவன் எம்மதத்தையும் தன் மதமாக ஏற்றுக்கொண்டான்.

அன்றைய கூட்டத்திலும் கூட ஆசிரியர் என்னை எழுப்பி சுரேசுக்கு முன் கதிரையில் இருத்தி விட்டார். ஏனெனில் அவருக்கு தெரியும் நாங்கள் கதைச்சுக் கொண்டு இருப்போம் என்று. நான் போய் முன்னாடி உட்கார்ந்தேன். சுரேசுக்கு தனிமை பிடிக்கவில்லை. எனது கதிரையை இழுத்தான் நான் விழுந்து விட்டேன். ஆசிரியருக்குக் கோபம் வந்தது எங்களை வெளியே அனுப்பி விட்டார்.

இப்படி அவன் குறும்புக்கு அளவே இல்லை. கல்லூரியிலேயே வரலாறு சேர் என்றால் சுரேசுக்கு பிரியம் அதிகம் எனக்கும் கூட. சேர் எப்போதும் அன்பாகத்தான் இருப்பார். சிலவேளைகளில் நாங்கள் விடைகூறாது விட்டால் அவருக்கு கோபம் வந்து விடும் திட்டுவார். அதை சுரேஸ் தாங்கமாட்டான் வகுப்பு முடிந்து போனதும் ஆசிரியரின் துவிச்சக்கரவண்டிக்கு பொலித்தீன், குப்பைகள், சருகுகள் வைத்து விட்டுப் போவான். ஆசிரியரும் ஒன்றும் சொல்லமாட்டார். அவருக்குத் தெரியும் நாங்கள் தான் அப்படிச் செய்வமென்று இப்படியாக நாட்கள் சென்றொழிந்தன.

நாம் கல்லூரியை விட்டுப்பிரியும் நேரம் வந்தது. அன்று எமது கல்லூரியின் ஆண்டுவிழா கூடவே. எமது பிரியாவிடையும் தான். அன்றைய நிகழ்வில் சுரேசின் பாடலும் இருந்தது. பாடும் போது குரலில் சற்று தளர்வு இருந்தது. முகமும் வாடியிருந்ததை நான் கண்டேன். அவனது பாடல் முடிந்ததும் சுரேசிற்கு பாராட்டுக்கள் குவிந்தன. ஆனால் அவன் அதை பொருட்படுத்தாது வந்தான்.

“சுரேஸ் ஏன் ஒருமாதிரி இருக்கிறாய் என்னாச்சு” “இன்றையோட நம்ம நட்பு, சந்தோஷம் எல்லாத்துக்கும் கடைசி நாள் என்று நினைக்கும் போது தாங்க முடியல “சுரேஸ் உண்மையான நட்புக்கு பிரிவில்லை. கல்லூரி வாழ்க்கை கொஞ்சக்காலம் தான். அதை சரியாகப் பயன்படுத்தவேணும்” என்று கூறிவிட்டு நான் வீட்டுக்கு வந்து விட்டேன். அன்றிரவு தூக்கமே இல்லை. கண்ணீர் தான் பெருகியது.

சுரேசை அவனது தந்தை வெளிநாடு போகும்படி கூறி வந்தார். அடுத்த நாள் காலை “படிப்பு முடிஞ்சுது. இனி என்ன வெளிநாடு தானே”

"வேண்டாமப்பா நான் இங்கேயே இருந்து இசையமைப்பாளராக வாறனப்பா"

"ஒரு மண்ணும் வேண்டாம். நீ வெளிநாடு போறாய் அவ்வளவு தான்" வேறு வழியில்லாமல் சுரேஸ் சென்றுவிட்டான் என்று எனது அப்பா எனக்கு கூறினார். அவனை அதற்கு பின் காணவுமில்லை. இன்றுதான் ஐந்து வருடத்தின் பின் சந்திக்கிறோம்.

"சுரேஸ் நீ எப்படி இஞ்ச வந்தாய்." உன்ர அப்பா?

"அப்பாதான் இஞ்ச வரச் சொன்னதே. நம்ப முடியவில்லையா அன்றைக்கு அப்பா பேப்பர் பாத்திருக்கிறார். வெளிநாடு பற்றி ஏதோ வாசிச்சிருக்கிறார். அதுவுமில்லாமல் அப்பான்ர சிநேகிதர் சொன்னாராம் மகனைப் பக்கத்திலேயே வச்சிரு அதுதான் உனக்கு நல்லதெண்டு அதுதான் வரச்சொன்னவர்.

சுரேசிற்கு சிறகு முளைத்த பறவைபோல் இருந்தது. தனது விருப்பப்படி இசையமைப்பாளராக, பாடகராக வரப்போகிறேன் என்று மகிழ்வடைந்து அதற்கான வேலைகளில் ஈடுபட்டான். பெரும்புகழையும் பெற்றான் உலகளவில் பிரபலமானான் சுரேசின் அப்பா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

"பிள்ளைகள் என்ன இலட்சியத்தை அடைய விரும்புகிறார்களோ அதன்படி பெற்றோர் அவர்களை விட வேண்டும். வீண் சுமைகளை அவர்கள் மேல் திணித்து அவர்களையும் வருத்தி நீங்களும் வருந்தக்கூடாது. அவர்கள் தமது இலட்சியத்தை அடைந்து வெற்றி பெறுவார்கள்" என சுரேசின் அப்பா தனது அனுபவத்தைக் கூறினார்.

**சி. விதுஷனா**
**தரம் - 11**

---

**ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கின்றான்!**
**அதனால்தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கின்றார்கள்.**
- கங்கேரி நாட்டுப் பழமொழி

# மனையும் மலர் அலங்காரமும்

மனையின் உள்ளக அலங்காரத்தின் போது மனைக்கு அபூர்வமான ஓர் அழகைப் பெற்றுத்தரக் கூடிய துணையணியாக மலர் அலங்காரத்தைக் கூறலாம். இது ஓர் கலைவடிவமாகவும் கருத முடியும். ஓர் ஒழுங்கு முறையில் மலர்கள் கிளைகள், இலைகள் என்பவற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்ட மலர் ஒழுங்கினால் ஒரு மனைக்கு அலங்காரமும் உயிர்ப்புத் தன்மையும் கிடைக்கும். எப்போதுமே மலர் அலங்காரமானது அலங்காரக் கோட்பாட்டையும் கலையின் அடிப்படைக் கோட்பாடுகளையும் கொண்டதாக அமைதல் வேண்டும். எமது இல்லங்களில் விசேடமாக மேசை, டீபோ, இராக்கை, கட்டைச்சுவர், படிகள், உயரமான தளபாடங்கள் என்பவற்றின் மேற்பகுதியிலும் தளத்திலும் மலர் அலங்காரத்தை மேற்கொள்ள முடியும்.

தனி நிறமுடைய பின்னணிக்கே மலர் அலங்காரம் ஏற்புடையதாக அமையும். மலர் அலங்காரம் மேற்கொள்ளும் போது மூவர்ண நிறத்தைப் பயன்படுத்துவோம் எனின் ஓர் நிறத்தை கூடுதலாகவும் இரண்டாம் நிறத்தை மத்தியளவிலும் மூன்றாம் நிறத்தை சிறிதளவிலும் பயன்படுத்தலாம். மலர்களை அலங்கரிக்கும் போது உயரமான பூந்தாளிகளுக்கு உயரமான மலர்களும் தட்டையான பூந்தாளிகளுக்கு தட்டையான மலர்களையும் பயன்படுத்தி அலங்கரிப்பதன் மூலம் கவர்ச்சிகரமானதாகவும் பார்ப்பவர்களைக் கவரக்கூடியதாகவும் அமையும்.

இவ்வாறாக மலர் அலங்காரமானது நாடளாவிய ரீதியாக அமைக்கப்பட்ட மனைகளில் அனைத்து மக்களும் விரும்பிப் பெற்றுக்கொள்ளும் பொருட்களில் இம்மலர் அலங்காரமும் ஒன்றாகும். ஒரு மனையின் வரவேற்பறைப் பகுதியை அலங்கரிப்பதற்கு கூட்டுமலர் ஒழுங்கு, தொங்கும் மலர் ஒழுங்குகளைப் பயன்படுத்த முடியும் படுக்கை அறையை அலங்கரிப்பதற்கு குளிர்வர்ண நிறத்திலான ரேகை மலர் ஒழுங்கைப் பயன்படுத்தக் கூடியதாகவும் சாப்பாட்டறையை அலங்கரிப்பதற்கு பதிவான வாசனையற்ற மலர் ஒழுங்கைப் பயன்படுத்துவதனால் உணவு உண்பவர்களது முகத்தை மறைக்காது ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடியதாகவும் அமையும். எனவே மனையினுடைய ஒவ்வொரு

அறையிலும் இவ் மலர் அலங்காரங்களை மேற்கொள்வதன் மூலம் மனதிற்குப் புத்துணர்வையும் புதுப்பொலிவையும் வழங்கும் தன்மை இவ்வாறான மலர் ஒழுங்குகளில் காணலாம்.

எமது நாடு தவிர்ந்த ஏனைய நாடுகளிலும் இம்மலர் ஒழுங்கு தயாரித்து வடிவமைக்கப்பட்டுவருகின்றது. சிலர் தமது தொழிலாகவும் மலர் அலங்காரங்களைச் செய்து விற்று அதன் மூலம் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். ஜப்பான் நாட்டை எடுத்துக் கொள்வோம் எனின் அங்கு ஒவ்வொரு வீடுகளிலும் இயற்கையாகக் கிடைக்கின்ற மலர்களைப் பயன்படுத்தி அவ் மலர் அலங்காரத்தை மேற்கொள்ளும் போது ஆகாயம், மனிதன், பூமி என்றமுறையில் அலங்காரம் செய்து மனையை அழகூட்டுவார்கள். ஜப்பானில் இது ஒரு கலையாக வளர்ச்சியடைந்துள்ளது. மலர் அலங்காரமானது மனையின் உள்ளக அலங்காரத்திலும் வெளியக அலங்காரத்திலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு வருகைதரும் விருந்தினர்களுடைய மனதைக் கவர்ந்து கொள்ளும் தன்மையும் இம்மலர் அலங்காரத்திற்கு உண்டு. எனவே மலர் அலங்காரத்தை மனையின் அலங்காரத்திற்காக பயன்படுத்துதல் சிறப்பாக அமையும் நாமும் மலர் அலங்காரத்தைச் செய்து மனையை அழகுபடுத்துவோம்.

**செல்வி சி. சுவேனியா**
தரம் 13

---

**ஆலயத்திற்கு அருகில் இருப்பவன்தான் தொழுகைக்குக் கடைசியாக வருவான்.**
- அயர்லாந்துப் பழமொழி

**செழிப்பான காலத்தில் அறிஞனின் இதயம் தாமரைப் பூப்போல மென்மையாக இருக்கிறது. கஸ்டகாலத்தில் மலைப் பாறையைப்போல் கடினமாக இருக்கிறது.**
- இந்தியப் பழமொழி

# My Best Friend

- My best friend is Rathika.
- She is tall and thin.
- She is very beautiful.
- She likes to eat cakes.
- Her favourite subject is maths.
- She can sing and dance.
- Her hobby is gardening.
- Her father's name is Pirabaharan.
- He is a clerk.
- Her mother's name is sithira.
- Her mother sithira is a house wife.
- My friend has a pet.
- It is a parrot.
- My friend wants to be a doctor one day.

**S.Janarthany**
**Grade – $7^B$**

---

# My favourite game

My favourite game is cricket. It is an interesting game. A cricket is played by eleven players in each two teams. A bat and a ball is needed to play the game. One day matches are more interesting than the test matches.

Cricket is played all over the world. It is a popular game. A lot of people watch the matches on the television. Bating, Bowling and fielding are good exercises. The batsman hits, shots and score run. My favourite bats man is Dilshan. I like sankagara too. Some cricket players are played profesionaly too. They earn a lot of money by playing cricket. By playing games one can develop leadership qualities, unity and companionship So playing game is a must to all of us.

**V.Gowshika**
**Grade 7**

# Trees

Trees are very useful.
They give us cool shade.
They give us the cool breeze.
They are our 'Green'.
They are nature's gift to man.
They give shelter to birds and animals.
They help to bring us rain.
Our jungles and forests are full of trees. There are also many trees in our compound. They are fruit trees like mango, Jak, orange, lime and wood apple. Coconut, plamyrah and arecanut are palm trees.

Trees like tamarind, olive, bo, banyan, mahogany, margosa and teak are tall trees. The have spreading branches, birds build nests on these trees.

Trees give us fruits. They give us fuel our houses, doors, windows, cupboards, beds and cradles are made of wood, we get the wood from the trees. Even the coffins in which we lie last are mode of wood.

We must be kind to the trees. We must not cut them down. We must not raise our hands against trees. It is a sin.

We must plant more and more trees. We can plant a tree on our birthdays. Our will be desert without trees.

Let us be kind to the trees.

**K.Sivatharany**

Grade 8[A]

Freedom starts in the mind. not in cutting ropes.

# The Real Meaning of Home Work

The daily routine work in our school definitely proves that a student's life incomplete with out home work. It is an important part of the education process. It provides revision and practice of what has been taught by teachers at school. It must be remembered that for the development of a well rounded personality youth should find time in their working hours to balance their studies and leisure time activities.

Home work brings about better understanding and rainforces Learning fact. It enables us to identify doubts. And other problem areas which can be clarified by the teacher. Home work is also very good feedback for the teachers as they get to know the week areas of the students and can help accordingly.

Parents also have an important role to play in this issue. Home work provides a bond of work between parent teachers and parents can support a child's interest in life-long learning by encouraging the child to complete the home work and even praise the child if the work is done. Who supervise home work, and work with children on it, on and about the school subject matters.It will also develop a good attitude of work.

**Babithiny Ramachandiran**
Grade - 9

Beautiful behavior is better than a beautiful form.
It gives a higher pleasure than statues or picture.
It is the finest of fine arts.

- Emerson

# Our Teachers

Teachers are like ladders who helps and guides us to become a good citizens in our country.

They teach us how to obey elders. How to behave kindly how to respect others soon.

As students it is our duty to be thankful to our teachers who are well prepared to teach us all the good things we have to tearn in all the fields.

To become better citizens teachers take great effort to uplift the students' knowledge in vast areas like education, behaviour, Conduct, manner, hospitality profession etc.

Teachers treat us as parents. They give love affection. Support and protection to us.

Regarding all the matters it is a must be thankful and greatful to the teachers.

Students like us, have to praise them, obey them, thank them and greet them.

Even though they get less salary than the other workers they take much strain to educate us and help us to shine in extra curricular activities like sports and drama.

**V. Priyanka**
Grade 10

Don't cross the bridge untill you come to it.

# Let's preserve the air around us

We always think that fresh air is infinitely available to us. The dirty air around us somehow escapes and new air kept coming in when we open a window. This is of course not true, what is true is that we live in a kind of space ship called the earth and only limited amount of air is forever available to us.

The 'walls' of our earth enclose which extends about seven miles up. This is all the air available to us. We must over and over again for infinity, Just as if we were in a sealed room for the life time of the earth. No fresh air comes in and no polluted air escapes. More over no dirt or poisons are ever destroyed, they remain in the air in different forms or settle on the earth as particulates. And the more we burn the more we replace good air with bad. The thin layer of air surrounding the earth cannot be cleansed again. We can clean materials, we can even clean water but we cannot clean the air. There is nowhere else for the dirt and poisons to go. We cannot open a window and clear out the stale and noxious atmosphere we create.

Most of us imagine that winds sweep away the gases and debris in the air taking them far into solar system and replacing them with new air.

Factories, heating systems, air planes and public buildings discharge tons of pollutents a year into the atmosphere. The air will never be cleaner than it is now.

And this is why prevention – immediate, drastic, and far reaching is our only hope for the future.

We cannot undo what we have done. We cannot restore the atmosphere to the purity it had, before the Industrial Revolution. But we can, and must halt our spaceship-the earth, suffocates from its own foul discharges.

**Mrs. V. Kumaralingam**
English Teacher

# ஊடகங்களும் உலக நடப்புகளும்

பொதுவாக ஊடகங்கள் எனும் போது அவை அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் என இரு வகையுள் அடக்கலாம். தினசரி செய்தித் தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் என்பன அச்சு ஊடகங் களுள்ளும், வானொலி, தொலைக்காட்சி, வலையமைப்புக்கள், இறுவட்டுகள், திரைப்படங்கள் போன்றன இலத்திரனி யல் ஊடகங்களுள்ளும் அடங்குகின்றன.

இவ்வாறான ஊடகங்கள் மூலம் மக்கள் செய்திகள், தகவல்கள், அறிவுறுத்தல்கள், போதனைகள், கலை இரசனைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். இச்செயற்பாடுகள் பொதுமக்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம்சார் பண்புகளின் விருத்திகளுக்கு வழிகாட்டி உதவுகின் றன. உலகமயமாதல் உலகெங்கணும் வியாபித்துக் கொள்வதற்கும் இவ்வூடகங் கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களித்து வருகின்றன. எனவே ஊடகங்கள் ஆக்கம், அழித்தல், காத்தல் எனும் சமகால நிகழ்வுகளுக்கு வழி காட்டுகின்றமையும் மனங் கொள்ளத் தக்கது. உதாரணம்:

(ஆக்கம்)
மல்லிகைப் புரட்சி ரூன்ஸியா முதல் மத்திய கிழக்கில் மையங்கொண்ட மக்கள் புரட்சி (மக்களைத் தூண்டுதல்)

(அழித்தல்)
ஐக்கிய அமெரிக் காவினதும் நேச அணியினரதும் ஈராக் மீதான இராணுவ ஆக்கிரமிப்பு (தவறான தகவல் வழங் குகை மூலம்)

(காத்தல்)அமெரிக்க சார்பு தேசங்களில் மக்கள் எழுச்சியை மட்டுப்படுத்தல் (சவுதி அரேபியா, ஓமான், குவைத்)

எனவே ஊடகங்களின் தாக்கமும் அவற்றினது பணிகளும் அள வற்ற வகையின என உணரற்பாலது. ஆகவே அவ்வாறான நிலையில் விழிப்புடன் நாம் இருந்து ஊடகங்களின் கருத்துக்களினை அறிந்து அதற்கேற்ப எமது அறிவினைப் பயன்படுத்தி உபயோகத்தன்மையிலான வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

ஏனெனில் இன்றைய ஊடகங் கள் யாவும் உலகமயமாக்கல் எனும் பெரும் சமுத்திரத்தினுள் அமிழ்ந்துள்ளது டன் மக்களையும் அதனுள் அமிழ்த்தும் வகையில் செயற்படுகின்றன எனில் மிகையல்ல. ஊடகங்கள் யாவும் உலகம் பூராவும் அதிகாரத்தரப்பினது விருப்பு, வெறுப்புக் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் அவற்றினை மக்களிடையே திணிப்பதற்கும் உறுது ணைபுரிகின்றன. ஆயினும் மக்களின் கருத்துக்களுக்கோ தேவைகளுக்கோ இவை முன்னுரிமையளிப்பதில்லை என்பதும் வெளிப்படை.

இதனைவிட சிலவேளைகளில் தனிப்பட்டவர்களது வாழ்வினைப் பாதிப்படையும் விதமாகவும் தனி மனித வாழ்வை நோண்டிப்பார்க்கும் செயலை யும் செய்கின்றன. இவை தவறான முன்னுாரணமாகவும் உள்ளன. குடும்ப வாழ்வையும் சமூக கடப்பாடுகளையும் சீரழிக்கின்றன. அத்துடன் பக்கச்சார்பான

வகையிலும் செயற்படுகின்றன. தேசியம் எனும் மாயையுள் மூழ்கி மக்களை திசை திருப்புகின்றன.

உதாரணமாக:

ஐக்கிய அமெரிக்கா மற்றும் தேசிய அணியினரது ஈராக் ஆக்கிரமிப்பின் போதும் ஆப்கானிஸ்தான் போரின் போதும் அப்போதைய ஜனாதிபதியான 'ஜோர்ஜ்புஸ்' பற்றி தென்னாபிரிக்காவினது முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உகந்த முறையில் சிந்திக்கவோ, செயற்படவோ தெரியாதவர் எனக் கூறியமை மனங்கொள்ளத்தக்கது.

உலகெங்கணும் பாலைவனம் போன்று வரண்ட நிலையிற் காணப்படும் மனிதாபிமான விழுமியப் பண்புகள் மேலெழும் வகையிலும் "பணம்" "பணம்" எனும் பொருளியல் சார் பண்புகள் சமூக இடைவினைகள் யாவும் தவிர்க்கப்படவும் மனிதம் மாண்புறவும் சமூகநலன் மேம்பாடடையவும் இயற்கை நேசிக்கப்படவும் நீதி நிலைபெறவும் நடுவு நிலையில் நின்று செயற்படுவதுடன் அரசியல் அதிகாரங்களுக்கு அடக்கும் முறைகளுக்கும் ஏமாற்று மோசடிகளுக்கும் போலிகளுக்கும் இடங்கொடாது மக்கள் நலன்கருதிச் செயற்படவும் வேண்டும். மொத்தத்தில் மக்கள் நீர் நீக்கிப் பால் பருகும் அன்னப்பறவை போன்று மக்கள் நலன் சமூக நலன் சார்ந்த அறிவு சார்ந்த விடயங்களைத் தெரிந்தெடுத்து உள் வாங்குதல் பயனுடையதாக அமையும்.

ஜனநாயகம், தேசியம், இறைமை எனும் மாயமான்களை முன்னிலைப்படுத்தி மக்களையும் சமூகத்தினையும் ஏமாற்றுவதும் திசை திருப்புதலும் சமகால நடப்புக்களாகும். மக்கள் ஏமாறும் நேரத்தில் தமது குறுகிய நோக்கங்களை அவரவர் முன்னிலைப்படுத்தி அடைகின்றனர்.

தீ { நல்ல சேவகன்
கெட்ட எஜமான்

எனவே தீ போன்றதான ஊடகங்களினை நாம் எமது நலன்களை மேம்படுத்தும் வழியில் பயன்படுத்த விழைதல் வேண்டுமேயல்லாது கெட்ட வழிகளில் பயன்படுத்தல் கூடாது. இதனால் எம்மை மட்டுமன்றி எமது சமூகத்தினை சிதைக்கும் வகையில் நடக்காது ஆக்கபூர்வமான சிந்தனை வழியில் செயற்படல் எமக்கும் எமது எதிர்கால சமூகத்திற்கும் பயன்பல அளிக்கும்.

ஊடகங்கள் தற்காலத்தில் போட்டித்தன்மையுடனும் இலாப நோக்குடனும் பொறாமையுடனும் செயற்படுவது நல்லதல்ல. மனிதமனங்களில் விஷவிதைகளை விதைத்தும் சமூக விரோதச் செயல்கள் பெருகக் கூடிய விதத்தில் செய்திகளை விபரித்தும் முக்கியத்துவமளித்தும் காட்சிப்படுத்தியும் சமூக விரோதச் செயற்பாடுகள், ஊழல், சதிநட வடிக்கைகள், அதிகாரத் துஷ்பிர யோகம், நீதியற்ற தன்மைகள், வன்முறை, வக்கிரபுத்திச் செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள், போதைவஸ்துப் பாவனை, ஒழுக்கவியல், சமூகவியல் நியம மீறல்கள் மனிதவுரிமை, அரசியல்வன்முறை, திட்டமிட்டதிரை மறைவு நெருக்கீடுகள் எனப்பலவகையான பண்பாடற்ற செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுகின்றன.

உதாரணமாக: இலகுவில் தற்கொலை செய்வது எப்படி என்ற விளக்கம் விபரம் (வலையமைப்பு)

உலகளாவியதான இளம்பெண்கள் கன்னித்தன்மை (பணம் முதன்மை பெறும் வகையில்) விற்பனை விளம்பரம் (வலையமைப்பு)

தவறான வழிகாட்டல்கள், திசை திருப்பல்கள் உலக அளவில் பிரசித்த மான காட்சிப் படம் "சோமாலியாவின் கிராமப்புறத்தில் பசி பட்டினியால் மெல்ல மெல்ல இறந்து கொண்டிருக்கும் ஒரு வரை உணவாக்கக் காத்துக் கொண்டிருக்கும் கழுகு" காட்சியைப் படம் பிடித்த அப்படப் பிடிப்பாளர் அந்நிகழ்வின் தாக்கம் காரணமாக மனமுடைந்து தற்கொலை செய்தார். இதிலிருந்து மனிதாபிமானம் துளிர்விடாது உலகளாவிய புகழ், பணம், பேராசை என்பன முன்னிலை வகித்து மனித நேயத்தை புதைகுழியில் இட்டது. இது போன்றதான பல மனித நேயமற்றதான மோசமான செயற்பாடுகட்கு ஊடகங்கள் முன்னுரிமையளிக்கின்றன. இவை 'மனிதம்' பேண உதவமாட்டா.

இறுதியில் இலங்கையில் இன்றுள்ள நிலைமை யாதெனில் சிங்கள ஆங்கில ஊடகங்கள் யாவும் பேரினவாதச் சிந்தனையுடனும் அதிகாரத்தரப்பிற்கு ஆதரவான போக்குடனும் தேசிய ஒற்றுமை, பல்லின கலாசார தன்மை, மனித உரிமைகள் ஜனநாயகப் பண்புகள் என்பவற்றிற்கு மாறான மனப்போக்குடனும் செயற் படுகின்றன. மக்களின் தேவை குறிப்பாக சிறுபான்மையினர் தொடர்பில் அக்கறையற்றும் மக்கள் நலன் புறந்தள்ளியும் குறுகிய மனப்பான்மையுட னும் செயற்படுவதும் நிதர்சனம். இவை நீண்டகால நோக்கில் எதிர்காலத் தொடர்பில் நம்பிக்கையீனத்தை அளிப்பனவாகவும் உள்ளன. இதனால் சமூகத்தில் குற்றவியல் சார்ந்த நடவடிக்கை மேலெழும் தன்மையிலான போக்கும் பெருகிவரும் குழப்பகரமான சூழ்நிலைகளும் காணப்படுகின்றன.

நல்லனவற்றை உள்வாங்கி தீயனவற்றைப் புறந்தள்ளி எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய தான தன்னம்பிக்கையும் உறுதியுமிக்க சமூக ஆக்கத்திற்கும் பாடுபடுவதுடன் இவ்வாறான சூழ்நிலையில் எம்மை நாமே காப்பதுடன் ஏனையவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து எமது சமூக எதிர்காலம் வளம்பெருகவும் பலம் பெறவும் ஏற்றதான பணிகளை முன் னெடுப்பதற்கு முன்னிற்போமாக.

**திரு. அ. இரங்கநாதன்**
அதிபர்.

## உங்களுக்குத் தெரியுமா?

- போசணை எனப்படுவது : உடலால் உள்ளெடுக்கப்படும் உணவு வகை சமிபாடடைந்து அகத்துறிஞ்சப்பட்டு உடலினால் பயன்படுத்தப்படுதல்.
- புரதத்தின் உயிரியல் பெறுமானம் =

$$\frac{\text{உடலினால் உள்ளெடுக்கப்படும் நைதரசன் பிரமாணம்}}{\text{உடலில் அகத்துறிஞ்சப்பட்ட நைதரசன் பிரமானம்}} X100$$

- லயிக்கோபீன் -தக்காளிக்கு சிவப்பு நிறம் வழங்குவது
- குளோரோபில் -பச்சை இலைவகையில் பச்சை மரக்கறியில் கணப்படுவது
- பால் உறைதல் - ஸ்ரெப்ரோ கொக்கஸ் பற்றீரியா
- உவைன் தயாரித்தல் - ஈஸ்ட்
- உணவு நஞ்சேற்றல் - குளொஸ்ரீடியம் பொட்டி யூலிஸியம் பற்றீரியா
- பிலாஞ்சிங் - நீரில் வெளிறச் செய்தல்
- வெட்டப்பட்ட அப்பிள் நிறமாற்றம் - பொலிப்பீனல் ஒக்சிடேசு
- உணவுத் தயாரிப்பின் சுவைச் சரக்கு - நிறமூட்டல், சுவையூட்டல், மணமூட்டல், உணவுத்தூண்டி மருத்துவ ரீதியான பயன்பாடு
- பௌதீகக் காரணிகளால் பழுதடையும் உணவுக் கூட்டம் - மரக்கறி வகை, பழவகை
- இரும்பு அகத்துறிஞ்சல் - விற்றமின் C
- உணவு நொதித்தல் எனப்படுவது - நுண்ணங்கி (காபனீரொட்சைட், மதுசாரம் என்பவற்றை வெளியிடும் தெழிற்பாடு)
- உணவைப் பொங்கச் செய்யும் பொருட்கள் - ஈஸ்ட், முட்டை வெண்கரு பேக்கிங்பவுடர், அப்பச்சோடா, சீனி
- உணவு பொங்குதல் - சுவை அதிகரிக்கப்படும் அளவுப் பெறுமானம் அதிகரிக்கும்,
- தேனில் அடங்கியுள்ள காபோவைதரேற்று- குளுக்கோசு, பிரற்றோசு
- பச்சை இலை மரக்கறியில் காணப்படுவது - பீற்றா கரட்டீன்
- உயிர்ச்சத்து K யின் இரசாயணப்பெயர் -நப்தாகுயினோன்

🖉 பாற்கூழ் (கஸ்டற்) தயாரிக்கும் போது தொடர்ந்து கரண்டியால் கலக்குதல் அல்புமின் திரளுவதைத் தடுக்க.

🖉 புழுங்கல் அரிசியின் போசனை பெறுமானம் - காபோவைதரேற்று, விற்றமின் B

🖉 உணவில் முட்டையின் தொழிற்பாடு - போசாக்கு, கவர்ச்சி, அலங்கரிப்பு வளியூட்டி மென்மையாக்கல் கவசமிடல்

🖉 மீன் உலர்த்தலில் உப்புச்சேர்த்தல் - மீனின் நீரை புறப்பிரசாரண முறையில் வெளியேற்ற

🖉 அதிகுளிரேற்றல் - $4°c - 18°c$ (மீன் , இறைச்சி என்பவை அதிகுளிரேற்றலில் வைக்கப்படும்)

🖉 உணவில் கோவாவை அடிக்கடி சேர்ப்பதன் தீமை - இரும்பு அகத்துறிஞ்சல் தடைப்படும்

🖉 புளோரின் குறைபாடு - பற்கள் கபில நிறமடைதல்

🖉 காபனேற்றம் செய்யப்பட்ட குடிபானங்கள் அதிகமாக குடிப்பதனால் ஏற்படும் தீமை (சோடா வகை) - பசி ஏற்படாது, நிறம், சுவையூட்டித் தாக்கம் ஏற்படுத்தும். உடலில் நடைபெறும் நேர் நைதரசன்

🖉 சமநிலை சந்தர்ப்பங்கள் - வளர்பருவத்தில், கர்ப்ப காலத்தில், பாலூட்டும் பருவத்தில்

**திருமதி. ச. இலட்சியன்**
**ஆசிரியை,**

# மெய்கண்ட நங்கையே

பலவிருட்சம் குடைபிடிக்க பகட்டான கட்டிடங்கள் வானுயர
மகரதோரணம் வாயில் அமைக்க அழகேயுருவான மெய்கண்ட நங்கையே

கல்விக் கதிபதியாம் கலைமகள் பங்கயத் தடாகத்தே பகட்டாய் வீற்றிருந்து
வள்ளல் ஏழுரர் தங்கச் சிலையாக நெடிதுயர்ந்து வரவேற்க
ஆடவல்லான் நடராஜன் அருள் மழை பொழிய
வெற்றித் திலகமாய் வீறு கொண்டு நிற்கும் வீரமங்கையாம் மெய்கண்ட நங்கையே

உன்னடியில் சேவையாற்ற உவகையுடன் வந்தவேளை
வாருங்கள் ரீச்சர் என்று வாயார வரவேற்று நின்ற அதிபராம் செல்லத்துரை
வெண்ணிறப் பட்சிகளாய் மாணவர் குழாம் நிரை செல்ல
மனதிற்கு இதமான பருவமதை மகிழ்வுடன் நினைவூட்டிய மெய்கண்ட நங்கையே

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு முதல் இன்றுவரை உன்நிழல் தொடர்கின்றேன்
இடப்பெயர்வின் போது நீ எங்கு சென்றாயோ அங்கும் நான் வந்தேன்
அரக்கர்களால் உன் அழகு பறிக்கப்பட்டு சிதைவுற்ற உன்நிலை கண்டு
என் அங்கமெல்லாம் சொல்லொணாத் துயருற்றது மெய்கண்ட நங்கையே

மெய்கண்டான் என்றால் மேன்மையான கல்விச் சமூகம் என மெய்சிலிர்க்கும் யாவர்க்கும்
புகழ்பூத்த அறிஞர்கள் கற்ற சாலை என்ற தனிப்பெருமை உனக்குண்டு
கல்வியில் மட்டுமா நாடகம் விளையாட்டு கூத்து என எதை விட்டுவைத்தாய்
வெற்றிக் கொடி நாட்டி வீரமுழக்கம் செய்த மெய்கண்ட நங்கையே

மாணவ சமுதாயம் இன்று கம்பியூட்டர் யுகத்தில் காலடி வைத்தாலும்
தமிழும் சைவமும் இன்றும் கமகம மணம் பரப்பும் உந்தன் காலடியில்
உந்தன் மடியில் தவழும் குழந்தைகள் நிலைதடுமாறாது கற்றிட
கருணை காட்டி காத்திடுவாய் எந்தன் மெய்கண்ட நங்கையே.

**திருமதி. பு. திருநாவுக்கரசு**
**ஆசிரியை**

## எமது பாடசாலையில் பேணப்பட்டு வருகின்ற சைவசமயப் பாரம்பரியங்கள்

எமது பாடசாலையானது சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் ஓர் சூழலிலே உருவாக்கப்பட்டதாகும். வெள்ளிக்கிழமைகளில் பூசை வழிபாடுகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும், நாயன்மார் குருபூசைகள், நவராத்திரி விழா, தைப்பூசம், நடேசர் அபிஷேகம், சிவராத்திரி, தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, நாட்படிப்பு, கார்த்திகை விளக்கீடு, மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடு, கீரிமலை 7ம் திருவிழா உபயம், மகாவித்தியாலய தினத்தில் ஆனைவிழுந்தான் ஆலயத்தில் அபிஷேகம் என சைவ விழாக்களுடன் தொடர்புபட்டதாக இப்பாடசாலை இருந்து வருகின்றது.

இப்பாடசாலையானது உருவாக்கப்பட்ட சூழ்நிலையை நோக்குகின்ற போது எமது ஊரில் ஆண்களும், பெண்களும் தனித்தனியாக கல்வி கற்பதற்கு இரு பாடசாலைகள் இருந்தபோதும் சைவப்பிள்ளைகள் தங்களுடைய சைவ சமய கலாசார, பண்பாட்டு ஆடைகளுடன் செல்வதற்கும், சைவ சமய பண்டிகைகள், விழாக்களை கொண்டாடுவதற்கும் முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இவற்றை எல்லாம் பார்த்து தன் மனதிற்குள்ளே ஏங்கிக் கொண்டிருந்த வள்ளல் ஏழூர் இராசரத்தினம் ஐயா அவர்கள் ஏழைப்பிள்ளைகளும் படிக்க வேண்டும் என எண்ணினார். தனது அயராத முயற்சியின் பயனாக தமது காணியில் ஓர் சைவப் பாடசாலையை நிறுவினார். இப்பாடசாலை கட்டிடங்கள் கட்டப்பட்டு கூரை ஓடு போடுவதற்கு பணம் இல்லாது துன்பப்பட்டவேளை அவரது அன்பு மனையாள் இவரின் துன்பத்தைப் போக்கத் தனது கழுத்தில் இருந்த மாங்கல்யத்தைக் கழற்றிக் கொடுத்தார். எந்தப் பெண்ணும் எத்தகைய துன்பம் வந்தாலும் தன் மாங்கல்யத்தைக் கழற்றமாட்டாள். ஆனால் இந்தப் பெண்ணோ தனது கணவரின் இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக தனது மாங்கல்யத்தைக் கொடுத்து உதவி இருந்தார்.

இப்பாடசாலையானது எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பது இப்போது எல்லோருக்கும் நன்கு புரிந்திருக்கும். இப்பாடசாலையை எல்லோரும் ஒரு கோயிலாகப் போற்றப்பட வேண்டும். பாடசாலை ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை சைவசமய பாரம்பரியங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதற்கு காரணம் எமது பாடசாலை ஆரம்பித்த காலத்தில் இருந்த அதிபர், ஆசிரியர், மாணவர்கள் தான். அவர்கள் விட்டுச்சென்ற சைவ சமய பாரம்பரியங்களைத்தான் நாமும் தொடர்ந்து பின்பற்றி வருகின்றோம்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நால்வரின் ஆசியும் பூரணமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாதா, பிதா, குரு தெய்வ வழிபாடு நடாத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு

வருடமும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரணப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் இந்நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்விற்கு ஆனைவிழுந்தான் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக்குருக்கள் அவர்களும் அருளாளர் ஒருவரும் வருகை தந்து ஆசி வழங்குவர். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொள்வர்.

எமது பாடசாலையில் 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் நடேசரபிஷேகம் இடம்பெற்று வருகின்றது. இதனை எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு. செ. பாலச்சந்திரன் ஆசிரியர் அவர்களின் ஆலோசனையுடன் நடைபெறுகின்றது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் எந்தவித தடங்கலும் இன்றி நல்லமுறையில் நடைபெற வேண்டும் என்பதற்காகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

சைவசமயக்குரவர்கள் என்று போற்றப்படுகின்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் குருபூசைத் தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. நற்பண்புகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள் அவர்கள் வாழ்ந்து காட்டியது போல நாமும் சைவநெறி நின்று வாழ வேண்டும் என்பதை நினைவூட்டவே பாடசாலையில் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுகின்றோம்.

ஒருவனுக்குக் கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றும் நிறைவுள்ளதாக இருந்தால் தான் அவனுடைய வாழ்வும் பூரணமாக அமையும். இம்மூன்றையும் நாம் ஒருங்கே நவராத்திரி காலங்களில் சத்தியை வணங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நினைவூட்ட நவராத்திரி விழா பாடசாலையில் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு வகுப்பிற்கும் பூசைகள் ஒதுக்கப்படுவதோடு நவராத்திரி காலத்தில் தொண்டுபடு போட்டிகளாக பஞ்சபுராணம் ஓதுதல், மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் நடாத்தப்படுவதன் நோக்கம் மாணவர்களிடம் இலை மறை காயாக மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர வேண்டும். மாணவரிடம் தலைமைத்துவப் பண்பு வளர வேண்டும், சைவசமயப் பாரம்பரியங்கள் அழிந்து போகாமல் தொடர வேண்டும் என்பதற்காகவே.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பான பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. பூசை வழிபாட்டின் போது மாணவர்கள் "ஆதி ஆதி ஆதி ஆதி ஆதியெக ஆதியே, யோதி, யோதி யோதி யோதி யோதியெக யோதியே" என இறைவனை மெய்யன்போடு வழிபடல் மிகவும் அற்புதமானது. ஓவ்வொரு வருடமும் மாசி மாதம் கீரிமலை நகுலேஸ்வர் ஆலயத்தில் இடம்பெறுகின்ற மகோற்சவத்தில் 7ம் திருவிழாவில் கலந்து கொண்டு பஜனை

செய்து சிறப்பித்து வருகின்றோம். அதேபோன்று ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் மகாவித்தியாலய தினத்தை முன்னிட்டு விசேட அபிஷேகம் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் ஐயா அவர்களின் கனவை நனவாக்க வேண்டுமேயானால் இப்பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, இங்கு கல்வி பயிலும் மாணவர்களாக இருந்தாலும் சரி அவர் விட்டுச்சென்ற சைவசமயப் பாரம்பரியங்களைக் கைவிடாது தொடர வேண்டும். ஒரு மாணவன் கல்வியில் சிறந்தவனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் விளங்க வேண்டுமானால் அவன் எந்த சமயத்தைச் சார்ந்தவனோ அந்தச் சமயத்தில் பற்றுள்ளவனாக, சமயத்தைக் கடைப்பிடிக்கின்றவனாக இருக்க வேண்டும். சமயத்தைப் பின்பற்றுவதன் ஊடாகவே ஒழுக்கத்தை பேணமுடியும். உலகம் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியை எதிர்நோக்கி வீறுநடை போடும் வேளையில் எமது நாடு கல்வித் திட்டத்தில் சமயத்தை ஒரு பாடமாகப் போதிக்க வேண்டும் என்பதற்காக சமய பாடத்தைக் கட்டாயமாக்கியுள்ளது. இதன் மூலம் எமது நாடு சமயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பது நன்கு புலனாகும். அண்மையில் தொலைக்காட்சியில், சர்வதேசப் பாடசாலைகளுக்கு பெற்றோர் பெருமளவு பணத்தைச் செலவிட்டு பிள்ளைகளை அனுப்புகின்றார்கள். அங்கு பிள்ளைகளின் ஒழுக்கம் சீர்குலைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்குக் காரணம் அங்கு மாணவர்களுக்கு சமயம் சரியாகப் போதிக்கப்படவில்லை. என்பதனாலே நாடு முழுவதும் அறநெறிப்பாடசாலைகள் நிறுவப்பட்டு சைவசமயம் போதிக்கப்படுகின்றது. பரீட்சைகளையும் நடாத்தி வருகின்றது.

"ஏழூரரைப் போல எடுத்த கருமத்தை
வாழ்வூரச்செய்யும் வலிபடைத்தோர் - யாழூரில்
எங்கணும் காணோம்
இளவாலை ஈன்றெடுத்த தீரர் இவர் என்கை தெளிவு"

என்று பண்டிதமணி அவர்கள் கூறியது போன்று ஏழூரரைப் போன்று இன்னுமொருவர் தோன்றாது விட்டாலும் அவர் காட்டிய வழியில் நின்று எமது பாடசாலையில் பேணப்பட்டுவரும் சைவசமயப் பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பது எமது கடமையல்லவா?

"எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

**திருமதி க. பத்மராஜா**
ஆசிரியர்

# மூன்று தசாப்தங்கள் மெய்கண்டான் அன்னையுடன்...

வலிகாமம் கல்வி வலயத்தில் வளம் மிக்க பாடசாலை
வள்ளல் ஏழூர் அமைத்த அழகு மிகு கல்விக்கூடம்
மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில்
மேன்மையுடன் கல்வி பயில நானும்
ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதில் அடி வைத்தேன்
அதிபர் செல்லத்துரை ஐயா அன்புடன் வரவேற்று
அத்திவாரம் இட்டார் முதலில் உயர்தரப்பிரிவை ஆரம்பித்து
கல்வியுடன் ஒழுக்கம் பண்பாடு கடமை
கண்ணியம் என்பவற்றைப் பெற்றேன் மெய்கண்டானில்
உயர்ந்த நல்லறிவு சைவப்பாரம்பரியங்கள் என
ஊட்டி வளர்த்ததோடு பேச்சாற்றல் கவிதை ஆற்றல் என
பல ஆற்றல்களை வளர்த்து என்னை
பாராட்ட வைத்தவளும் மெய்கண்டான் அன்னையே

உயர்தரப் படிப்பை முடித்து மீண்டும்
உள்வாங்கப்பட்டேன் தொண்டர் ஆசிரியராய்
ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழில்
அதிபர் செல்லத்துரை ஐயா அழகாகப் போதித்தார்
கண்டிப்புடன் கற்பித்தல் நுட்பங்களை
கற்பித்தல் முறையில் எப்பாடசாலையிலும்
கடமையினை மேற்கொள்ள மெய்கண்டான்
காட்டிய நல்லறிவு என்றும் துணைநிற்கும்

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறில்
அரசாங்கம் தந்த நிரந்தர நியமனம் பெற்று
வேறு பாடசாலை சென்று கற்பித்து மீண்டும்
வேண்டும் சேவை மெய்கண்டானுக்கு என்று
ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்கில்
அகமகிழ்ந்து அடி வைத்தேன் மெய்கண்டானில்
இரண்டு வருட சேவை இனிதாய்க்கழிய
இடப்பெயர்வு காரணமாய் இடம்பெயர்ந்தேன் வன்னிக்கு

வன்னிப் பெருநிலப்பரப்பில் கடமையிலிருந்தாலும்
வாழ்வித்த மெய்கண்டான் என்றும் மனதிலிருக்க
விழாக்கள் எது வந்தாலும் மறவாது என்னை
விரும்பி அனுப்பிடுவர் அழைப்பிதழ்கள்

பவள விழா அழைப்பிதழ் கண்டு நானும்
பாசமுடன் மெய்கண்டான் வர நினைத்தாலும்
பரிதவித்தேன் பூட்டிய A9 பாதையை நினைத்து
பரமனருள் வேண்டி மெய்கண்டான் அன்னையின்
பாதம் பணிந்து வாழ்த்துக்கள் கூறி அமைதி பெற்றேன்.

ஏழு வருடத்தின் பின் பாதை திறந்தவுடன்
ஏழூரர் அமைத்த கலைக்கோயிலில்
கால் பதித்தேன் மெய் சிலிர்த்தேன்
கண்ணீர் சொரிந்து அகமகிழ்ந்தேன்
அதிபர் பேரம்பலம் ஐயா அன்பாக வரவேற்று
அன்னை மெய்கண்டானுக்கு வர
வழியமைத்துத் தந்து வித்திட்டார்
வளமான சேவையினைப் பத்து வருடங்கள்
மீண்டும் நிறைவு செய்த பூரிப்பால்
மனமகிழ்ந்து நிற்கின்றேன்

சிறப்பாக சேவை செய்த அதிபர்
சிவானந்தராசாவின் சேவைக் காலத்தில்
சேவையாற்றி நானும் மகிழ்வடைந்தேன்
சமூக விஞ்ஞான பாடத்தில் சிறந்த பெறுபேற்றுடன்
மாவட்டம் மாகாணம் என
மாணவர்கள் வெற்றிபெற மனமகிழ்ந்தேன்

என் ஆசிரியர் சேவைக் காலத்தில்
பதினோராவது அதிபர் நிர்வாகமாம்
இரங்கநாதன் அதிபர் அவர்களின் காலமதில்
பற்றுடனே சேவை செய்ய முனைகின்றேன்
ஆசிரியர் இடமாற்றம் அனைவருக்கும் வரும் போது
அதன் வழி சேவையினை செய்திடுவேன் நானும்

மெய்கண்டான் அன்னையுடன்
மெய்யன்புடன் முப்பது வருடங்களுக்கு மேல்
உறவாடிய என்காலம் என்றென்றும் என்
உள்ளத்தில் இனிதாய் நிலைத்திருக்கும்
மெய்கண்டான் அன்னை மெய்யொளி வீசி
மேதினியில் என்றும் மங்காப் புகழுடன் வாழ
நடராஜர் திருவடியை நான் பணிந்து
நாளும் வேண்டி வணங்குகின்றேன்.

**திருமதி வ. இராமச்சந்திரன்**
ஆசிரியை

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறன்மிக்கதாக விளைதிறன்மிக்கதாக அமைய வேண்டின் அங்கே நிலவுகின்ற தோன்றுகின்ற இடர்பாடுகளை அறிய வேண்டும். பின்பு தீர்வுகள் தொடர்பாக செயலாற்ற வேண்டும்.

மாணவர்களின் வரவு ஒழுங்கின்மையானது அவர்களது பாடங்களை முன்னெடுத்துச் செல்வதில் தடையாகவும் அத்தடையானது மாணவர்கள் தொடர்ந்து கல்வியில் பின்தங்குவதற்கும் காரணமாகின்றது. குறிப்பிட்ட ஒரு பாட அலகைக் கற்பிக்கும் போது மாணவர் அதற்கு சமூகமளிக்காமல் இருந்தால் தொடர்ந்து அது தொடர்பான ஏனைய அலகுகளைக் கற்கும் போது தொடர்பற்ற நிலை காணப்பட்டு விளங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இதனால் மாணவர் ஒவ்வொரு அலகிலும் பின் தங்கி இறுதியில் பாடத்தை வெறுக்கும் நிலையும் மிகக் குறைவான நிலையும் காணப்படும். ஆரம்ப வகுப்புகளில் எண்ணும் எழுத்தும் ஒழுங்காகக் கற்காத மாணவன் இடைநிலை வகுப்புகளில் விரைவாகக் கற்பதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் கஸ்டப்படுவான். மொழியிலே விருத்தி குறைவாக உள்ள மாணவர்கள் ஏனைய பாடங்களை இலகுவில் விளங்கிக் கொள்ளவும் சிரமப்படுகின்றனர். எண்களை ஆரம்ப வகுப்புக்களில் முறையாக கற்காத மாணவர்கள் மேல் வகுப்புக்களில் கணித எண்களை தொடர்புபடுத்துவதில் சிரமம் அடைகின்றனர். குடும்பத்தில் ஏனையோர் கொண்டுள்ள கல்வி அறிவானது பிள்ளையின் கல்வியில் முக்கிய பங்கினை வகிக்கிறது. குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர் கல்வி அறிவுடையவராக இருப்பின் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்கு கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அத்துடன் குடும்பத்தின் கற்றல் சூழலை நன்கு அமையுமாறு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களினதும் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களினதும் கடமையாகும். பொருத்தமான வள ஆசிரியர்கள் பயன்படுத்தப்படாமை கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

குறிப்பிட்ட பாடம் சம்பந்தமாக ஆசிரியர்களின் திறமை அறியப்பட்டு அவர்களின் திறமைக்கு ஏற்றமுறையில் பகிர்ந்து அளிப்பதன் மூலம் மாணவர்கள் பயன் பெறுவர். மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தை நோக்கிய கற்பித்தல் செயற்பாடு இன்மையும் மாணவர்கள் கல்வியில் பின்னடைவதற்கு ஒரு காரணமாகும். ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் வெண்கட்டியும் கரும்பலகையும் மட்டும் பாவிப்பது கற்றலுக்கு பொருத்தமானதாக அமையவில்லை. துணைச்சாதனங்களின்றி சில அலகுகள் கற்பிக்கப்படும் போது மாணவர்களுக்கு சரியான எண்ணக்கருவமைப்பு

ஏற்படுவதில்லை. மெல்லக் கற்போரின் பிரச்சினைகளை நன்கு உணராமல் கற்பதால் அவர்களால் மற்றைய மாணவர்களுடன் ஒத்துப் போகச் செய்தல் என்பது மிகவும் கடினமானதாகும். மாணவர்கள் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் கொண்டுள்ள இடர்பாடுகளை அறிந்து முன்கூட்டியே அறிந்து திட்டமிடப்படாமையும் அவர்களை மேம்படுத்துவதற்கான இலக்கை அடைவதற்கு தடையாக உள்ளது. மாணவர்களிடம் இலைமறைகாயாக மறைந்திருக்கும் திறமைகள் வெளிக்கொணரப்படாமையும் அத்திறமைகளையும் வெளிக்கொண்டுவரும் பட்சத்தில் கௌரவிக்கப்படாமையும் பிள்ளையின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. மாணவர் திறமையைக் கொண்டிருந்த போதும் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஆகக்குறைந்த அடிப்படை வசதிகள் இல்லாத நிலை சகபாடிகளுடன் கல்வியில் சமாந்தரமாகச் செல்வதற்குத் தடையாக இருப்பதோடு அவர்களுடன் உரையாடுவதற்கும் தடையாக உள்ளது.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கியம் பெறுவது ஆசிரியரின் மனப்பாங்காகும். ஆசிரியரின் மனப்பாங்கு மாறாத வரையில் பிள்ளையின் முன்னேற்றத்தில் ஆசிரியரின் பங்கு கேள்விக் குறியாகவே காணப்படும். நாட்டில் ஏற்படும் அசாதாரண நிலைமைகளும் அரசியலாளர்களின் தலையீடும் கற்றல் செயற்பாட்டில் தடையை ஏற்படுத்துகிறது. இயற்கை அனர்த்தங்கள் பாடசாலைக்கல்வி நிர்வாகத்திலும் மாணவர்களின் கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்கின்றன. அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களைச் சான்றாகக் கொள்ளலாம். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் போது ஆசிரியர்களினதும், பாடசாலைகளினதும் பெற்றோர்களினதும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சக்திகளின் தலையீடு நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. மனித உரிமைகள் போன்ற அமைப்புக்களின் மாணவர் மீதான தலையீட்டு அதிகரிப்பும் அவ்வமைப்புகள் கொண்டுள்ள சட்டங்களும் மாணவர்களின் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துகின்றன.

ஆசிரியர்களின் குறிப்பிட்ட பாடம் சார்ந்த அறிவிலும் ஏனைய துறை சார்ந்த அறிவிலும் ஆழ்ந்த தன்மை காணப்படாமையும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் பின்னடைவிற்குக் காரணமாகும். குறிப்பிட்ட பாடம் சம்பந்தமாக ஆசிரியர்கள் தம்மை முன்னேற்றுவதற்கு ஊக்கம் எடுப்பதும் மாணவர்களின் நிலையைப் பொறுத்து அமைகின்றது. ஏனைய துறைசார்ந்தவற்றில் சாதாரண அறிவு இல்லாமை தனது பாடத்தை முன்னேற்றுவதற்குத் தடையாக உள்ளது. இவ்விடயத்திலே பெற்றோர்கள் கொண்டுள்ள பிழையான அபிப்பிராயமும் ஒரு காரணமாகின்றது. வகுப்பறையில் ஏற்பட்டுள்ள மாணவர்கள் அதிகரிப்புத் தன்மை தனியாக மாணவனை அவதானிப்பதற்கு பெரும் சிரமத்தை ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. மீத்திறன் குறைந்த பிள்ளைகள் மெதுவாகக்கற்போர் என்பவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து

அவர்களுக்குத் தேவையான விடயங்களைக் கற்பதற்கும் இம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புத் தடையாக உள்ளது.

வளங்களின் சரியான பிரயோகமின்மையும் கல்விசார் செயற்பாடுகளை முன்னேற்றுவதில் தடையாக உள்ளது. குறைந்த வளங்களைப் பயன்படுத்தி குறைந்த நேரத்தில் கூடிய வினைத்திறன், விளைதிறன்களைப் பெறுவதே சிறந்த வளப்பிரயோகமாகும். சில பாடசாலைகளில் வளங்கள் அதிகம் இருந்தும் அதன் பிரயோகம் பாவனைக்குறைவாகவும் சில பாடசாலைகளில் வளங்கள் போதியளவு இன்மையும் நாம் காண்கின்றோம். ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பளக் கொடுப்பனவுகள் என்பவற்றில் கல்வி அமைச்சும் வலயக்கல்விப் பணிமனைகளும் செயற்படும் திட்டமற்ற முறைகள் கல்விச் செயற்பாடுகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றிற்கு நாட்டில் ஏற்படும் அரசியல் ஸ்திரமற்ற ஒரு நிலையும் காரணமாகும். குறிப்பிட்ட காலங்களில் செய்துமுடிக்க வேண்டிய ஆசிரியர் இடமாற்றங்கள் வருடம் முழுவதும் நடைபெறுவதும் குறிப்பிட்ட ஆசிரியர்கள், அதிபர்களுக்கான கொடுப்பனவுகள் குறிப்பிட்ட காலங்களில் வழங்கப்படாமையும் மாணவர்களின் கல்விக்காக பாடசாலையில் ஏற்படுத்தப்படும் ஆண்டுத்திட்டத்தை குறிப்பிட்ட காலங்களில் சமாந்தரமாகக் கொண்டு செல்ல முடியாதிருப்பதையும் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கற்றல் இடர்பாடுகளை வெற்றி கொள்வதில் கல்வியை வழங்கும் நிறுவனங்களான பாடசாலைகள் பெரும் பங்குவகிக்கின்றன இதில் பிரதான பங்காளிகள் ஆசிரியரும், மாணவருமே எனவே இவ்விருவரது இடர்பாடுகளும் இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டியவையாகின்றன. இந்நிலையில் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சமூக சமரச மனப்பான்மை போன்ற விழுமியப் பண்புகளை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகின்றன.

எனினும் கல்வி உலகில் பிரவேசித்துள்ள ஆசிரியர்கள் கற்றலைப் பாதிக்கும் காரணிகளை மறந்து பாடசாலையில் தூரநோக்கு, பணிக்கூற்று என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமாகின்றது. தம்மிடம் கற்கும் பிள்ளைகளிடம் கற்றலை விரிவுபடுத்த தம்மால் இயன்ற நுட்பங்கள், உதவிகள் என்பவற்றைக் கையாளுவது விரும்பத்தக்கது. பிள்ளைகளிடம் கற்றலை அதிகரிக்க அல்லது விரிவுபடுத்த ஆசிரியர்கள் பின்வரும் முறைகளைக் கையாளலாம்.

01. உள்ளார்ந்த ஊக்கத்தைப் பயன்படுத்தல்

இங்கு விளையாட்டு, ஆராய்தல், கண்டுபிடித்தல், தகவல்களைத் திரட்டுதல், பகுத்தல், தொகுத்தல் போன்ற கற்பித்தல் முறைகளைக் கையாளலாம்.

02. வெளிவாரியான ஊக்கத்தைப் பயன்படுத்தல்
- ❖ வெகுமதியளித்தல்
- ❖ தண்டனையளித்தல்
- ❖ அடைவுமட்டத்தை வகுத்துக் கற்பித்தல்
- ❖ வெற்றிபெறும் வகையில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- ❖ போட்டி, கூட்டுறவு மனப்பான்மை போன்றவற்றை ஏற்படுத்திக் கற்பித்தல்

03. கற்றல் செயல் ஒழுங்கை பிள்ளைகளின் முயற்சியில் வெற்றி பெறக்கூடியவாறு அமைத்தல்.

04. கற்றலின் போது நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி பிள்ளையின் இரசிக்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்தல்.

05. கற்பிக்கும் விடயங்களை சிறு விடயங்களாகப் பிரித்துக் கற்பித்தல் கலந்துரையாடுதல்.

06. கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மைய அணுகுமுறையைக் குறைத்து பிள்ளைகளது செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

07. மகிழ்ச்சிகரமான கற்பித்தற் சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல்

08 பிள்ளைகளின் தனியார் வேறுபாட்டை உள்வாங்கி அதற்கேற்ற அணுகுமுறைகளைக் கையாளுதல்.

09. பிள்ளைகள் தமது இலக்கை அடைவதற்கு குடும்பத்தாலும் பாடசாலையாலும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

09. ஆசிரியர் பெற்றோர் தொடர்பை இறுக்கமாகப் பேணுவதன் மூலம் பிள்ளையின் கற்றலில் நம்பிக்கையை வளர்த்தல்.

10. இணைபாடத்திட்ட செயற்பாட்டில் பிள்ளைகளை ஈடுபடுத்தி கற்பித்தல்.

11. பிள்ளைகளிடம் காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கிக் கற்பித்தல்.

**திரு. வி. நற்குணசிங்கம்**
(B.A. Dip in Ed.)
ஆசிரியர், இந்துநாகரீகம்

**உசாவியவை:-**

லோகேஸ்வரன். R (2008)கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும் - அகவிழி
சின்னத்தம்பி. க சுவர்ணராஜா.க (2007) அறிகைத் தொழிற்பாடும் ஆசிரியரும்

# தீபத்திருநாளாம் கார்த்திகைத்திருநாள்

"விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கின் முன்னே வேதனை மாளும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே"
- என்பது திருமூலர் வாக்கு.

எமக்கு ஒளி தருகின்ற பொருள்கள் சூரியன், சந்திரன், விளக்கு ஆகிய மூன்றுமே ஆகும். கதிரவனும் சந்திரனும் எமக்கு வேண்டும் போது உதவுவது இல்லை. விளக்கினை எமக்கு வேண்டிய இடங்களில் வேண்டிய போது வேண்டிய வண்ணம் ஏற்றிக் கொள்ளலாம். எனவே ஒளி விளக்கம் தரும் இந்த விளக்கின்றி நாம் வாழ்ந்து விட முடியாது. விளக்கு தமிழர்களது வரலாற்றோடு தொடர்பு கொண்ட பொருளாக மட்டுமன்றி ஒரு மங்கலப் பொருளாகவும் விளங்கி வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சியில் விளக்குகளினது தேவைப்பாடு குறைந்து விட்டாலும் விளக்கின் முக்கியத்துவம் வீடுகளில் குறைந்து விடவில்லை. விளக்கு வீடுகளில் காட்சிப் பொருளாகத் திகழாது தினமும் நன்றாக விளக்கி, எண்ணெய் வார்த்து, திரியிட்டு, பூ வைத்துப் பொட்டு வைத்துத் தீபம் ஏற்றி அதனை வழிபட்ட பின்பே மின்விளக்குகளை எம்மவர் மாலையில் ஏற்றுவர். இதனாலேயே விளக்கினை நாம் தீப விளக்கு, தீப இலக்குமி, தீப நாச்சியார் என்றெல்லாம் மிகச் சிறப்போடு போற்றுகின்றோம்.

பசு நெய் விட்டு எம்பெருமானுக்கு விளக்கேற்றுவது சிறப்பைத் தரும். காலை நேரத்தில் விளக்கு ஏற்றுவதன் மூலம் மங்கலம் பொங்கும் மெய்ஞ்ஞானம் பொங்கும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ஞ்ஞானம்...." என அப்பர் கூறுவதன் மூலம் விளக்கின் சிறப்பை அறிய முடிகின்றது.

இவற்றுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகத் திகழ்வதே கார்த்திகைத்தீபத்திருநாள் ஆகும். இந்நாள் கடவுள் ஒளி வடிவானவர் என்பதை நினைவூட்டுகின்றது. திருவிளக்கு வழிபாடு பெண்களுக்குரியது. இதனாலேயே பெண்களைக் குடும்ப விளக்கு எனவும் குடும்பத்தில் விளக்கு ஏற்ற வந்தவள் என்றும் குறிப்பிடுவர்.

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் இருள் அகன்ற நள்ளிரவில் தெருக்களில் விளக்குகளை நிரற்பட ஏற்றி மாலைகளைத் தொடுத்து ஊரின் கண்ணே பலரும் ஒருங்கு சேர்ந்து விளக்குத் திருநாளைக் கொண்டாடி வந்தனர் என அகநானூறு கூறுகின்றது.

இத்தீபத்திருநாள் என்றால் அண்ணாமலைத்தீபம் என்று கூறுமளவிற்கு அண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினத்தில் ஆலயங்களிலும் வீடுகளிலும் வரிசையாகத் தீபங்களை ஏற்றுவர். கோயில்களில் சுட்கப்பனை எரிப்பர். சுட்கப்பனை என்பதே மருவி சொக்கப்பானை என வழங்கப்படுகின்றது. சுட்கம் என்பது வரட்சி என்பதாகும். ஆலயத்தில்

எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குப் பூசையை நிறைவுசெய்து கொண்டு உலர்ந்த தென்னை , பனை, கமுகு , வாழை இவற்றின் தண்டினைத் தீபத்தண்டாக ஆலயத்தில் நாட்டி உயர்ந்த பனையோலையினால் விமானம் போல உயரமாக முற்றாக மூடிக்கட்டியிருக்கும் சுட்கப்பனைக்கு தீ மூட்டுவார். அது சுவாலித்து எரியும் போது அதனை சாதாரண அக்கினியாகக் கருதாமல் சோதிமயமாகவும் திருவண்ணாமலைத் தீபமாகவும் வழிபடுவர். இந்தத் தீபத்திருநாளின் தாயாகத் திருவண்ணாமலை திகழ்கின்றது. ஆலயங்களில் தீபமேற்றல், தீபதரிசனம் காணல் போன்றவற்றை பலர் பாவநிவிர்த்திக்காக செய்து வருகின்றார்கள். அன்றைய தினம் இல்லங்களில் நடைபெறும் தீப உற்சவத்தினை சர்வாலய தீபம் எனவும் திருக்கார்த்திகைத் தினத்தன்று முருகன் கோவில்களில் கொண்டாடப்படும் தீப உற்சவத்தினை குமாராலய தீபம் எனவும் அழைப்பர். திருமாலுக்குக் கொண்டாடப்படும் உற்சவத்தினை விஸ்ணுவாலய தீபம் எனவும் அழைப்பர்.

அறியாமல் திரியினைத் தூண்டிய எலிக்கு நேர்ந்த பூர்வீகக் கதையைப் படிப்பதன் மூலம் திருவிளக்கின் சிறப்பை அறிந்து கொள்ளலாம். அதாவது ஒரு நாள் சிவாலயத்தில் தீபம் ஒன்று எரிந்து கொண்டிருந்த போது அந்த விளக்கிலிருந்த நெய்யினை உண்ணும் பொருட்டு எலி அருகில் சென்றது. சுடர் எலியின் முகத்தில் சுட்டதனால் தாவி ஓடியது. ஓடும் போது திரி அசைவுற்றதனால் விளக்கு முன்பைவிட பிரகாசமாக ஒளிர்ந்தது. அந்த எலிதான் மறுபிறப்பில் மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்ததாகக் கதைகள் கூறுகின்றன. அறியாமல் செய்த எலிக்கே இப்பதவி கிடைக்குமானால் பலன் அறிந்து விளக்கேற்றுபவர்களுக்கு எத்தகைய பதவி கிடைக்கும் என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

எமது உடல் மனையாகவும் உள்ளம் பாத்திரமாகவும் அதில் உணர்வாகிய நெய்யினை ஊற்றி உயிர் என்னும் திரியினையிட்டு பிராணன் என்னும் காற்றினை நிறுத்தி அறிவுச் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக்கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இடைவிடாமல் தூண்டிக் கொண்டிருந்தால் ஆணவமாகிய மாய இருள் இல்லாமல் போய்விடும்.

அவ்வாறே நிறுவுநரும் அறியாமை என்னும் இருள் அகற்றி அறிவைப் புகட்டும் தீப விளக்கான யா/இளவாலை மெய்கண்டான மகா வித்தியாலயம் எனும் அறிவாலயத்தைத் தோற்றுவித்தமையால் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களும் கார்த்திகைத்திருநாளில் சிவகதி அடைந்தமை அவர் செய்த புண்ணியச் செயலேயாகும். மேலும் கார்த்திகைத் தீபநாளில் நாம் செய்யும் ஒவ்வொரு நற்காரியங்களும் சிறப்பாக அமைவதுடன் நற்காரியங்களில் ஈடுபடும் அனைவரும் நற்கதி அடைய முடியும் என்பது திண்ணம்.

**திருமதி இ. யோகலிங்கம்**
ஆசிரியை

## யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

## பரிசுப்பட்டியல் ~ 2012

**தரம் - 01**

01. இ. தனுஜா
02. சு. கிருத்திகா
03. உ. சுடர்விழி

**தரம் - 02**

04. இ. நிஜாந்
05. சு. குகாஜினி
06. செ. டிவின்சிகா

**தரம் - 03**

07. வி. சசிதரன்
08. கு. வினுசன்
09. ஜெ. கயானுசன்

**தரம் - 04**

10. சி. வானுப்பிரியா
11. சி. பவதாரணி
12. க. நிந்துஜன்

**தரம் - 05**

13. செ. கஜநிலானி
14. சி. ராதிகா
15. ஜெ. தயானுசன்

### தரம் 6 A

| | |
|---|---|
| 16. சி.வின்சிகா | றோமன் கத்தோலிக்கம், தமிழ், கணிதம், ஆங்கிலம், வரலாறு, பிரயோகத்தொழில் நுட்பம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், விஞ்ஞானம், நடனம் |
| 17. உ.பிரியங்கா | சமயம் |
| 18. ச.அனோஜன் | சித்திரம் |

### தரம் 6 B

| | |
|---|---|
| 19. பா.நிறஞ்சனா | சமயம், விஞ்ஞானம், சங்கீதம் |
| 20. வ.கஜன்சிகா | வரலாறு, குடியுரிமை, பிரயோகத் தொழில்நுட்பம், சுகாதாரம், நடனம் |
| 21. அ.மதுஜன் | சித்திரம், கணிதம், தமிழ், புவியியல் |

### தரம் 7 A

| | |
|---|---|
| 22. இ.துஸ்யந்தி | சமயம் , தமிழ், ஆங்கிலம், குடியுரிமை, விஞ்ஞானம் |
| 23. இ.கஜகரன் | கணிதம், வரலாறு, புவியியல், சங்கீதம் |
| 24. தி.சதுர்சனா | பிரயோகத் தொழில்நுட்பம் |
| 25. ஜெ.அபினா | நடனம், சுகாதாரம் |
| 26. சி.சுமணன் | சித்திரம் |

### தரம் 7B

| | |
|---|---|
| 27. செ.ஜனார்த்தனி | சமயம், குடியுரிமை, |
| 28. வி.கௌசிகா | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமை,புவியியல், சுகாதாரம், பிரயோகத் தொழில்நுட்பம், சங்கீதம் |
| 29. ச.சஞ்சிதா | நடனம் |
| 30. க. ஐங்கரன் | சித்திரம் |

### தரம் 8 A

31. கி.சிவதாரணி — கணிதம், நடனம், பிரயோகத் தொழில்நுட்பம், சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம். வரலாறு, புவியியல்.
32. ப.நெகோமி — றோமன் கத்தோலிக்கம், சுகாதாரம், சங்கீதம்.
33. இ.பெனாயா — சித்திரம்
34. ரா.கோகுசன் — குடியுரிமை

### தரம் 8B

35. மோ.தனுஜா — சமயம், விஞ்ஞானம்.
36. அ.சஞ்சீபன் — சித்திரம், தமிழ், புவியியல், சுகாதாரம், வரலாறு.
37. சி.விபுசா — ஆங்கிலம், நடனம், குடியுரிமை.
38. கு.கலைமகள் — பிரயோகத் தொழில்நுட்பம்
39. க.சஜீபன் — கணிதம்
40. நா.கார்த்திகா — சங்கீதம்

### தரம் - 09

41. இ. பபிதினி - விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, தமிழ், புவியியல், சுகாதாரம், ஆங்கிலம், செய்முறை திறனும் தொழில் நுட்பத்திறனும்
42. பா. வித்தியாதரசர்மா - கணிதம்
43. இ. வீதியாள் - சித்திரம், கிறிஸ்தவம்
44. ஜெ. பவன்ஜா - சங்கீதம்
45. சௌ. திலக்சிகா - நடனம்
46. பா. நிரோஜனா - சமயம்

### தரம் - 10

47. க. கபிலன் - ஆங்கிலம், கணிதம், வரலாறு, வணிகக்கல்வி, நாடகமும் அரங்கியலும், தககவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
48. பா. திலக்ஷனா - குடியுரிமை, சங்கீதம், விஞ்ஞானம், மனைப் பொருளியல்
49. வி. பிரியங்கா - தமிழ், நடனம், சுகாதாரம்
50. இ. காலேப் - கிறிஸ்தவம்
51. இ. சுதர்சினி - சமயம்
52. ஜெ. சுலக்ஷனா - சித்திரம்

**தரம் - 11**

| | | |
|---|---|---|
| 53. சி. விதுஷனா | - | சமயம், தமிழ், ஆங்கிலம், நாடகமும் அரங்கியலும் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம், வணிகக்கல்வி |
| 54. இ. பர்ணபா | - | கிறிஸ்தவம், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் |
| 55. பா. சுகன்யா | - | வரலாறு, குடியுரிமை |
| 56. செ. ஜனனீதன் | - | சித்திரம் |
| 57. மோ. நிதர்சனா | - | நடனம் |
| 58. நா. கம்சிகா | - | சுகாதாரம் |
| 59. செ. மேரிடெல்சிமலர் | - | மனைப்பொருளியல் |

**தரம் - 12**

60. அ. சகானா
61. சி. சுவேனியா
62. நா. பவித்திரா

**தரம் 13**

63. சி. கிருஷ்ணவேணி
64. செ. மேரிஜெசிமலர்
65. ச. ஜினோஜன்

## சிறப்புப் பரிசுகள் - 2012

| | | |
|---|---|---|
| 66. சிறந்த சிறுகதை எழுத்தாளர் | - சி. விதுஷனா | |
| 67. சிறந்த ஓவியர் | - றூ. நிலக்ஷனா | |
| 68. சிறந்த நர்த்தகி | - சி. சுவேனியா | |
| 69. சிறந்த மெய்வல்லுநர் | - து. சுயர்ணியா | |
| 70. கபடி வீராங்கனை | - 15 வயது | - ஜெ. பவண்யா |
| 71. | - 19 வயது | - சி. சிவனுஜா |
| 72. | | - து. சுயர்ணியா |
| 73. | | - நா. கம்சிகா |
| 74. கரப்பந்து வீரன் | - 15 வயது | - க. மயூரன் |
| 75. | - 17 வயது | - செ. ஜனனீதன் |
| 76. | - 19 வயது | - பொ. பிரக்ஷன் |
| 77. கராத்தே வீராங்கனை | - 17 வயது | - நா. கம்சிகா, ( குமித்தே, காட்டா) |
| 78. கரம் வீராங்கனை | - 15 வயது | - சௌ. திலக்சிகா |
| 79. கரம் வீரன் | - 19 வயது | - க. கபிலன் |
| 80. கபடிப்பயிற்றுனர் | - து. சுயன் | |



2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி செல்வி செ. கஜநிலானி



மாகாண மட்டத்தில் காட்டா, குமித்தே ஆகிய கராத்தேப் போட்டிகளில் 1ம் இடம் பெற்ற மாணவி நா. கம்சிகாவுடன் அதிபர், உப அதிபர்.

**தரம் - 5 புலமைப்பரிசில் சித்தி - 2012**

81. செ. கஜநிலானி - 168 புள்ளிகள்

**தரம் - 5 புலமைப்பரிசில் 100 புள்ளிகளுக்கு மேல்**

82. ஜெ. தயானுசன் - 137 புள்ளிகள்
83. வி. பிரவீனா - 124 புள்ளிகள்
84. சி. ராதிகா - 110 புள்ளிகள்

**மாகாண மட்ட சிறப்புப் பெறுபேறு தரம் - 9**

85. க. கபிலன் - 6A 5B

**க.பொ.த (சாதாரணம்) விசேட சித்தி**

86. பா. சோபனா 8A 1C


**க.பொ.த (சாதாரணம்) சித்திபெற்றோர்**

87. ப. டினோஜா
88. சி. வற்சாஜினி
89. பு. கஜரூபி
90. ச. திலக்சன்
91. ச. எழில்சன்
92. சி. ஜனோஜன்
93. க.பொ.த. (உயர்தரம்) - சி. சிந்துஜா 2C 1S
94. - து. சுயன் 2C 1S
95. மெய்யவன் - ச. ஜினோஜன்
96. மெய்யவள் - சி. கிருஷ்ணவேணி

# ஞாபகார்த்தப் பரிசில்கள்

| இல | வழங்குபவர் | நினைவுக்குரியவர் | துறை |
|---|---|---|---|
| 01 | திருமதி. த. கிருபாசக்தி | ஏழுர் இராசத்தினம் | தமிழ்மொழி |
| 02 | திருமதி. த. கிருபாசக்தி | திருமதி. சின்னப்பிள்ளை ஏழுர் இராசத்தினம | சமயம் |
| 03 | திருமதி. த. கிருபாசக்தி | திரு. சண்முகம் தர்மதாசன் | ஆங்கிலம் |
| 04 | சேதுப்பிள்ளை குடும்பம் | திருமதி. க. சேதுப்பிள்ளை | க.பொ.த. (சா.த)க.பொ.த (உ.த)சிறந்த பெறுபேறு |
| 05 | Dr. க. பாலசுப்பிரமணியம் | திரு. திருமதி. கந்தையா | கணிதம் |
| 06 | Dr. த. பேரானந்தராசா | திரு. த. தம்பிப்பிள்ளை | விளையாட்டு |
| 07 | கலாபூசணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை | திருமதி. செ. சிவகாமசுந்தரி | மெய்யவன்,மெய்யவள் விருதுகள் |
| 08 | திரு. அ. பேரம்பலம் | திரு. திருமதி. அருணாசலம் சின்னாச்சி | விஞ்ஞானம் |
| 09 | திருமதி. சி. தர்மபாலா | திருச்செல்வம் புவனேஸ்வரி | ஆங்கிலம் |
| 10 | திரு. ச. சிவானந்தராசா | திரு. க. சங்கரப்பிள்ளை | சிறந்த சேவையாளர் விருது |
| 11 | திருமதி. செல்லம்மா உலகநாதன் குடும்பம் | திரு. செ. உலகநாதன் | க.பொ.த (சா.த) சித்தி |
| 12 | திரு. சி. மோகன் | திரு. மு. சிவராசரத்தினம் | புலமைப்பரிசில் |
| 13 | திரு.சந்தானம் சங்கரப்பிள்ளை | திரு. திருமதி. சங்கரப்பிள்ளை | ஆங்கிலம் |
| 14 | திரு. பா. தர்மபாலா | திரு. செ. பாலசுப்பிரமணியம் | சிறந்த மாணவன் |
| 15 | திரு. து. ஆனந்தராசா | திருமதி. ஆ. சாந்தினி | தமிழ் |
| 16. | திருமதி சி. பிரசன்ஜா | திரு. த. கோபிநாத் | --- |

# பாடசாலைக் கிடைப்படம்




01. அலுவலக அறை
02. கணனி அறை
03. அதிபர் அறை
04. Multimice Room
05. மாடி ஞானாமிர்த மண்டபம்
06. சிறுவர் விளையாட்டு
 முற்றமும் பூங்காவும்
07. நூலகம்
08. செயற்பாட்டறை
09. மேல்மாடி
10. தரம் 1 வகுப்பறை
11. தரம் 2 வகுப்பறை
12. சிற்றுண்டிச்சாலை
13 A. சமயலறை
13 B. நடராஜர் ஆலயம்
14. கனகசபா மண்டபம்
15. ஏழூர் மண்டபம்
16. விளையாட்டு அறை
17. களஞ்சிய அறை
18. விஞ்ஞான அறை
19. சங்கீத அறை
20. ஏழூர் அரங்கு
21. ஒப்பனை அறை
22. பெண்கள் மலசலகூடம்
23. விசேட கல்வி அலகு
24. தரம் 3 வகுப்பறை
25. தரம் 4 வகுப்பறை
26. தரம் 5 வகுப்பறை
27. விளையாட்டு மைதானம்

# இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் கல்விப்பணியில் நல்லாசிரியர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| திரு.அ.இரங்கநாதன் | S L P S 2 II | அதிபர் | ஏழாலை | 2012.04.02- |
| திரு. ச. சிவானந்தராசா | SLPS 2-1 | அதிபர் | மல்லாகம் | 2005.08.15<br>2012.01.26 |
| திரு. செ. ஆனந்தீஸ்வரன் | Ma.Tr. | ஆசிரியர் | சித்திரமேழி | 2004 - |
| திருமதி ச. இலட்சியன் | H.Eco.Tr. | ஆசிரியர் | இளவாலை | 1989.12.13- |
| திருமதி. பு. திருநாவுக்கரசு | Com. Tr. | ஆசிரியர் | இளவாலை | 1990 - |
| திருமதி வ. குமாரலிங்கம் | En.Tr. | ஆசிரியர் | இளவாலை | 1990 - |
| செல்வி இ. மதிவதனி | Sc.Tr. | ஆசிரியர் | மாரீசன்கூடல் | 1998 - |
| திருமதி மா. உதயகுமார் | Ta.Tr. | ஆசிரியர் | மாரீசன்கூடல் | 2001.01.01- |
| செல்வி.ச.சின்னத்துரை | Sc.Tr. | ஆசிரியர் | மாரீசன்கூடல் | 2003 -10.05.2012 |
| திருமதி வ. இராமச்சந்திரன் | So.Tr. | ஆசிரியர் | கருகம்பனை | 2003 - |
| திருமதி த. ஞானச்சந்திரன் | P.G.D.E. | ஆசிரியர் | மாரீசன்கூடல் | 2005 - 09.03.2012 |
| திருமதி யூ. அன்ரனிராஜா | En.Tr. | ஆசிரியர் | இளவாலை | 2005 - |
| செல்வி செ. சுகிர்தா | P.G.D.E. | ஆசிரியர் | சங்கானை | 2005 - |
| திரு. ச. கஜந்தன் | Art.Tr. | ஆசிரியர் | புன்னாலைக்கட்டுவன் | 2007 - |
| திருமதி இ. யோகலிங்கம் | P.G.D.E. | ஆசிரியர் | சித்திரமேழி | 2008.02.08 - |
| திருமதி ஜி. விக்னேஸ்வரன் | Dra.Tr. | ஆசிரியர் | ஏழாலை | 2008 - |
| திரு. வி. விஸ்ணுகரன் | Sp.ed .Tr. | ஆசிரியர் | ஊரெழு | 2008 - |
| திரு. சி. பாலகிருஸ்ணன் | P.G.D.E. | ஆசிரியர் | மருதனார்மடம் | 2009 -15.03.2012 |
| திருமதி க. பத்மராஜா | Ta.Tr. | ஆசிரியர் | இளவாலை | 2009 - |
| திருமதி யோ. ஸ்ராலின் | B.FA | ஆசிரியர் | அளவெட்டி | 2009 - |
| திருமதி க. பரமேஸ்வரன் | Phy. Ed. | ஆசிரியர் | சித்திரமேழி | 2009 - |
| திரு. பா. செந்தூரன் | Ma.Tr. | ஆசிரியர் | ஏழாலை | 2010 - |
| திருமதி ம.கி.சற்குணராஜா | B.FA. | ஆசிரியர் | இளவாலை | 2010.01.20 - |
| திரு.ம.சிவமோகன் | Pri Tri | ஆசிரியர் | அளவெட்டி | 2012.03.14- |
| திரு.வி.நற்குணசிங்கம் | PG D E | ஆசிரியர் | தெல்லிப்பளை | 2012.03.28- |
| திருமதி.அ.தம்பிராசா | Pri.Tr. | ஆசிரியர் | கட்டைக்காடு | 2012.04.25- |
| திரு. து. இந்திரஜித் | Dra.Tr. | ஆசிரியர் | சுன்னாகம் | 2012.08.06- |

# நிதி அன்பளிப்புச் செய்தோர்

| | |
|---|---|
| தர்மசக்தி நிதியம் | 45000.00 |
| திரு. சிவ. கௌரிபாலன் | 40000.00 |
| திரு. செ. உ. சந்திரகுமாரன் | 20000.00 |
| திரு. க. காசிநாதன் | 3000.00 |
| சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக்குருக்கள் | 1000.00 |
| அருட்திரு எ. எட்வினாதன் | 1000.00 |
| திருமதி செ. கர்ணகலா | 1000.00 |
| திரு. இ. இரவீந்திரன் | 1000.00 |
| திரு. நா. விஜேந்திரன் | 1000.00 |
| திரு. நா. அனந்தன் | 1000.00 |
| திருமதி வி. முருகதாசன் | 1000.00 |
| செல்வி சி. ஆன்சோபியா | 1000.00 |
| திருமதி சி. தர்மபாலா | 1000.00 |
| திரு. க. கிருபானந்தராசா | 1000.00 |
| திருமதி ஜெ. அகல்யா | 1000.00 |
| திருமதி சி. பிரசன்யா | 1000.00 |
| திரு. சி. மோகன் | 1000.00 |
| திரு. அ. பேரம்பலம் | 1000.00 |
| திரு. க. தர்மராசா | 1000.00 |
| திரு. பொ. மதியழகன் | 1000.00 |
| திருமதி க. சுந்தரமூர்த்தி | 1000.00 |
| திரு.த.நாகநாதன் | 500.00 |
| திரு. ப. தம்பிரத்தினம் | 500.00 |
| திருமதி ப.சிவபாக்கியம் | 500.00 |
| திரு. வே. சண்முகநாதன் | 500.00 |
| திருமதி ஞா. அற்புதமலர் | 500.00 |
| செல்வி ச. நகநந்தினி | 500.00 |
| திருமதி க.பரமேஸ்வரன் | 300.00 |
| திரு. ஜெ. ஜெயறோசன் | 200.00 |

# நன்றிகள்

நிர்வாகத்தைத் திறம்பட இயக்கி வருவதுடன் இம் மெய்யொளி மலர் சிறப்புற வெளிவர ஆலோசனைகளை வழங்கிய அதிபர் அவர்களுக்கும்

பாடசாலை அபிவிருத்தியிலும் கல்விச் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்பட்டு வரும் பெற்றார், பழைய மாணவர்களுக்கும்

பாடசாலைக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை செவ்வனே செய்துவரும் ஆசிரியர்களுக்கும்

பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக மனித, பௌதிக வளங்களை தந்து உதவும் கல்வித்திணைக்களத்தினருக்கும்

"மெய்யொளி" மலர் மலர ஆக்கங்களைத் தந்துதவியதோடு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும்

இன்றைய விழா சிறப்புற நடைபெற நிதியுதவி வழங்கிய நல்லுள்ளங்களுக்கும்

மலருக்கான புகைப்படங்களையும் இன்றைய விழாவிற்கான புகைப்படங்களையும் எடுத்து உதவிய திரு.வீ.விஜயகாந்தன் அவர்களுக்கும்

சிறந்த அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த திரு.ச.கஜந்தன் ஆசிரியர் அவர்களுக்கும்

"மெய்யொளி" மலரை அச்சுப்பதித்து உதவிய பண்டத்தரிப்பு J S அச்சகத்தாருக்கும்

**எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**- மலர்க்குழுவினர் -**

# நன்றிகள்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible]











